ISSN 1391-9504

# விஜய்

Vijey විජය

08.10.2008 - மலர் 05, இதழ் 31

Price Rs. 20.00
(With transport cost)
விலை ரூ: 20.00



## புத்தகப்பை பாரமா?

## அறிவிப்பாளராவது எப்படி?

## சர்வதேச அஞ்சல் தினம்

## அச்சுறுத்தும் எலிக்காய்ச்சல்

விலை ரூபா 12/-

**தமிழ்பேசும் பிள்ளைகளுக்கான அறிவுசார் வாரப்பத்திரிகை**

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

**ஜகிரி நந்தினி நந்தித மேதினி**
**விஷ்வ விநோதினி நந்தனுதே**
**கிரிவர விந்தய சிரோதினி வாசினி**
**விஷ்ணு விலாசினி ஜிஷ்னுனுதே**
**பகவதி ஹி சிதி கண்ட குடும்பினி**
**பூரி குடும்பினி பூரிக்கிர்தே**
**ஜெய ஜெய ஹி மஹிஷாசுர மர்தினி**
**ரம்யக பர்தினி ஷைலசுதே.**

சிவனுக்கு ஒரு ராத்திரி சிவராத்திரி. சக்திக்கு ஒன்பது ராத்திரிகள் 'நவராத்திரி' வருடாந்தம். புரட்டாதி மாதத்தில் வளர்பிறைப் பிரதமை முதல் நவமி வரை ஒன்பது நாட்கள் அனுஷ்டிக்கப்படும் விரதமே நசித்து அவன் மீது ஏறி மிதித்து வதம் செய்தாள்.

இந்தக் காட்சியைக் கண்ட அனைத்து தேவர்களும், ரிஷிகளும் பூமாரி பொழிந்து வாழ்த்தினர். மஹிஷனை அழித்ததனாலேயே 'மஹிஷாசுர மர்தினி' என அழைக்கப்பட்டாள். இவ்வாறு எட்டு நாட்கள் போர் செய்து ஒன்பதாம் நாள் போரின் போது மஹிஷனை வதம் செய்து புதிதாக அவதாரமெடுத்த மஹஷாசுர மர்தினிக்காக அனுஷ்டிக்கப்படும் விரதமே நவராத்திரி விழாவாகும். இது நவமியில் நிகழ்ந்ததாகவும் மறுநாள் தசமியில் தேவர்கள் வெற்றியை ஆயுத பூஜை செய்து கொண்டா

# மர்தினியின் அவதாரமும்



'நவராத்திரி' விழாவாகும். நவம் என்றால் ஒன்பது. ஒன்பது ராத்திரிகள் இந்த பூஜையை மேற்கொள்வதால் 'நவராத்திரி' எனப்படுகின்றது. ஒன்பது நாட்கள் நவராத்திரி விழா அனுஷ்டிக்கப்பட்டு பத்தாவது நாள் 'விஜய தசமி' கொண்டாடப்படுகிறது. இந்த பூஜை ஸ்ரீ சக்தி தேவியை டிய படியால் பத்தாவது நாள் 'விஜயதசமி' என சொல்லப்படுகிறது.

## விஜயதசமி

இந்நாளில் துர் சக்திகள் அழிந்து, தூய சிந்தனைகள், புதிய எண்ணங்கள் உருவாகித் துணிவும், ஆற்றலும் கிடைக்க வேண்டும் என்பதே நோக்கமாகும். இந்நாளை ஒரு புனிதமான நாளாகக் கருதி

# மஹிஷனின் அழிவும்

முழுமுதற் கடவுளாகக் கொண்டே அனுஷ்டிக்கப்படுகின்றது. முதல் மூன்று நாட்கள் ஸ்ரீ துர்க்கா தேவிக்கும், அடுத்த மூன்று நாட்கள் ஸ்ரீ லக்ஷ்மி தேவிக்கும், கடைசி மூன்று நாட்கள் ஸ்ரீ சரஸ்வதி தேவிக்கும் என ஒன்பது நாட்கள் பூஜிக்கப்படுகின்றன.

சரஸ்வதி தேவி 'ஞான சக்தி' எனவும், லக்ஷ்மி தேவி 'கிரியா சக்தி' எனவும் துர்க்காதேவி 'இச்சா சக்தி' எனவும் போற்றப்படுகின்றார்கள். இந்த மூன்று சக்திகளும் இணைந்த அவதாரமே 'சண்டிகாதேவி' இந்த அவதாரத்தின் முக்கிய நோக்கம் தேவர்களையும் சத்ருக்களையும் அழிப்பதற்கு பலமும் சக்தியும் வேண்டுமென அக்கினி பகவானிடம் வரம் பெற்ற 'மஹிஷன்' என்னும் அரக்கனை அழிப்பதேயாகும். மஹிஷனின் அட்டூழியங்களைத் தாங்க முடியாத அனைத்து தேவர்களும், ரிஷிகளும் அடைந்த துன்பங்களைக் கேள்வியுற்ற சிவபெருமானும், ஸ்ரீமன் நாராயணனும் கடும் கோபம் கொண்டனர். இந்தக் கோபத்தின் உக்கிரத்தில் எடுத்த அவதாரம் தான் சண்டிகாதேவி அவதாரம். சண்டிகாதேவிக்கும், மஹிஷனுக்குமிடையில் நடந்த கடுமையான போரில் தேவி, அவனது சக்திகள் அனைத்தையும் தோற்கடித்து அவனது எருமைத் தலையை

கல்வி தொழில் போன்ற நற்காரியங்களை ஆரம்பிப்பதன் மூலம் சக்தி தேவியின் அருளும், ஆசியும் பரிபூரணமாக கிடைக்கும் என்பதே நம்பிக்கை. இந்நாளில் ஆயுத பூஜையும் அனுஷ்டிக்கப்படுவதால் அவரவர் தமது தொழில்துறை சார்ந்த ஆயுதங்களை (கலப்பை, இசைக்கருவி, கணினி) வைத்து பூஜை செய்வதும் வழக்கம்.

## கொலு வைத்தல்

நவராத்திரி விழாவின் மற்றுமொரு முக்கியமான சிறப்பம்சம் 'கொலு வைத்தல்' இந்த கொலு வைத்தல் பெரும்பாலும் கோயில்களிலும், பாடசாலைகளிலும் வீடுகளிலும் இடம்பெறுகிறது. கடவுள் உருவச்சிலைகள், கவிஞர்கள், தேசிய தலைவர்கள், மிருகங்கள் அம்மன் சிலைகள் போன்றவற்றை அடுக்கி, மலர்களாலும் வண்ண ஒளி விளக்குகளாலும் அலங்கரித்து காட்சிப் படுத்துவதே 'கொலு வைத்தல்' ஆகும்.

இந்த நவராத்திரி திருநாளில் சக்தி தேவியை (மலைமகள், திருமகள், கலைமகள்) தரிசிப்போருக்கு தேவியானவள் சகல சௌபாக்கியங்களையும் நல்குவாள் என்பதோடு வீட்டுப் பேறாகிய முக்தியையும் அருளுவாள் என்பது சத்திய வாக்கு!

-உ[illegible]

# சகல பாடசாலைகளுக்கும் ஊடக சங்கம்





'மனித நேயம் மற்றும் வினைத்திறன் மிக்க பாடசாலை ஊடக கலாசாரம்' என்ற தொனிப்பொருளை மையமாகக் கொண்டு இலங்கையிலுள்ள பாடசாலைகளில் ஊடக கலாசாரமொன்றை ஏற்படுத்தும் நோக்கில் பாடசாலை ஊடக சங்கங்களை உருவாக்கும் தேசிய மட்டத்திலான வேலைத்திட்டம் இத்தோடு ஆரம்பிக்கப்படுகின்றது.

## ஊடக சங்கமொன்றை பாடசாலையில் ஏற்படுத்தல்

✱ முதலாவதாக பாடசாலை அதிபருடன் கலந்துரையாடுங்கள். ஊடக சங்கம் அமைப்பதற்கு ஆர்வம் கொண்டுள்ள ஆசிரிய/ஆசிரியைகள் மற்றும் மாணவர்கள் இந்தக் கலந்துரையாடலில் பங்குபற்ற முடியும்.

✱ ஊடகத் தொடர்புத்துறையில் ஆர்வமும் திறமையும் கொண்ட மாணவர்களை இனங்கண்டு பெயர்ப்பட்டியலொன்றை அவர்களது விபரங்களுடன் தயாரித்துக் கொள்ளுங்கள்.

✱ பட்டியலில் சேர்க்கப்பட்ட குறித்த மாணவர்களுடன் மீண்டும் சந்திப்பொன்றை ஏற்படுத்துங்கள். இதற்கென பாடசாலை அதிபரையும் பங்குபற்றச் செய்தால் மிகவும் நன்று.

இன்னும் இரண்டு தடவைகளாவது கலந்துரையாடல்களை நடத்துங்கள். இதன்பின்னர் நடத்தப்படும் கலந்துரையாடலின்போது உறுப்பினர்களை நியமித்துக் கொள்ளுங்கள். உயர்தரத்தில் கற்கின்ற மாணவர்களை பிரதான பதவிகளுக்கு நியமிப்பதை தவிர்த்துக் கொள்ளுங்கள். ஏனெனில், உயர்தரப் பரீட்சைக்குத் தயார்படுத்த வேண்டியிருப்பதனால் இதற்கு மேலதிக நேரத்தை அவர்களால் செலவிட முடியாதிருக்கும். எனினும், எந்தவொரு சவாலுக்கும் தயாராக உள்ள உ/தர மாணவர்களையும் சேர்த்துக் கொள்வதில் தவறில்லை. நியமிக்கப்பட்ட உறுப்பினர்கள் ஒன்றிணைந்து வருடாந்த வேலைத்திட்டமொன்றை உருவாக்கிக் கொள்ளுங்கள்.

வருடாந்த வேலைத்திட்டமானது ஊடக சங்கத்திற்கு பொறுப்பான ஆசிரிய/ஆசிரியையின் அனுமதியின் கீழ் பாடசாலை அதிபரின் அங்கீகாரத்தைப் பெற்றுக்கொள்ளல் வேண்டும். பின்னர் ஊடக சங்கத்தின் சந்திப்பில் (கூட்டத்தில்) முன்வைத்து இறுதி அங்கீகாரத்தைப் பெற்றுக்கொள்ளுங்கள்.

## செயற்குழு சபைக்கான வெளியார் பங்களிப்பு

பிரதேசத்தின் ஊடகவியலாளர்கள், அரச/அரசு சாராத நிறுவனங்களைச்சேர்ந்த அங்கத்தவர்கள், ஊடகமற்று கலைத்துறையைச் சேர்ந்த மூத்தோர், பழைய மாணவ/மாணவியர் ஆகியோரை உள்ளடக்கியதான வெளியார் பங்களிப்பை கொள்வதற்கான சபையொன்றை உருவாக்குவதற்கு பாடசாலை அதிபரின் அனுமதியை பெற்றுக் கொள்ளுங்கள். அனுமதி கிடைத்ததன் பின்னர் குறித்த வெளியார் பங்களிப்பு சபைக்கு உத்தியோகபூர்வமாக அதனை அறியப்படுத்துங்கள். ஊடக சங்கத்தின் நடவடிக்கைகள் குறித்து எப்போதும் அவர்களுக்கு அறியப் படுத்துங்கள்.

## ஊடக சங்கத்தின் உள்ளகக் குழு

பாடசாலை அதிபர் ஊடக சங்கப் பொறுப்பாசிரியர், ஊடக சங்கத்திற்கென அதிபரால் நியமிக்கப்படுகின்ற மற்றுமொரு ஆசிரியரை உள்ளடக்கியதாக ஆலாசனை சபை காணப்படும். சகல நடவடிக்கைகளும் இந்த ஆலோசனை சபையின் அனுமதியின் பின்னரே செயற்படுத்தப்படுவது நல்லது.

## உறுப்பினர் சபை

தலைவர் (உப தலைவர் ஒருவர் அல்லது இரண்டு பேர், செயலாளர் (ஒருவர் அல்லது இரண்டு பேர்), பொருளாளர் (பிரதிப் பொருளாளர் ஒருவர் அல்லது இரண்டு பேர்), பிரதான வேலைத்திட்ட அமைப்பாளர்கள் (ஏழு பேர்), வேலைத்திட்ட உப அமைப்பாளர்கள் (ஏழு பேர்)

## வேலைத்திட்டங்கள்

01. செயற்பாடு மற்றும் ஆய்வு வேலைத்திட்டம்
02. திறன் அபிவிருத்தித் திட்டம்
03. படைப்புத்திறன் திட்டம்
04. ரசனை கொள்ளல் திட்டம்
05. சமூக தொடர்பாடல் திட்டம்
06. அனர்த்த, விபத்துக்கள் தொடர்பான தொலைத்தொடர்புத் திட்டம்
07. புரிந்துணர்வு (சமாதானம்) தொலைத்தொடர்புத் திட்டம்)

★ **வேலைத்திட்டப் பணிகள்**

மேற்குறிப்பிட்டுள்ள வேலைத்திட்டங்களுக்கேற்ப ஒவ்வொரு வேலைத்திட்டத்திற்கென ஓர் அமைப்பாளரும் ஓர் உப அமைப்பாளரும் இருப்பர். அவ்வாறு மொத்த ஏழு திட்டங்களுக்கும் பொறுப்பாக அமைப்பாளர்களும் உப அமைப்பாளர்களுமாக தலா இரண்டு பேர் காணப்படுவர். அங்கத்துவ உறுப்பினர்களின் எண்ணிக்கைக்கு வரையறை கிடையாது. எந்தவொருவருக்கும் வேலைத்திட்டமொன்றை முன்வைக்க முடியும். இந்த வேலைத்திட்டத்தின் கீழ் எந்தவொரு வேலைத்திட்டப் பணியையும் ஊடக சங்கத்தின் நலனை முன்னிட்டு செயற்படுத்த முடியும்.

★ **உறுப்புரிமை**

உறுப்புரிமை இரண்டு வகைப்படும்.
முழுமையான உறுப்புரிமை
(Full Member)

தொலைத்தொடர்புத்துறை, ஊடகத்துறை தொடர்பில் கூடிய புலமையைக் கொண்டுள்ளவர்கள் முழுமையான உறுப்புரிமையைப் பெறக்கூடிய வகையைச் சேர்ந்தவர்களாவர். (ஆக்கத்திற்காக உறுப்பினர்கள் நியமிக்கப்படுவதும் இந்தப் பிரிவைச் சேர்ந்தவர்களைக் கொண்டேயாகும்), இரண்டாம் பிரிவானது Associate Member ஆரம்பநிலை உறுப்பினர்களாக இவர்களைக் கருதமுடியும். ஊடகத்துறை தொடர்பாக விசேட புலமை இல்லாத எனினும் ஊடகத்துறையில் கூடிய ஆர்வத்தைக் கொண்டவர்களை இந்த வகையில் சேர்க்கலாம். இவர்களது இடைவிடாத தொடர்ச்சியான மூன்று மாதகால பங்களிப்பின் பின்னர் முழுமையான உறுப்புரிமையாளர்களாக இவர்களை நியமித்துக் கொள்ளவும் முடியும்.

## ஊடக சங்க முகாமைத்துவம்

ஊடக சங்கம் தொடர்பான எந்தவொரு பிரச்சினையிலும் தீர்மானிக்கும் அதிகாரம் பாடசாலை அதிபர் வசமே இருக்கும்.

## ஊடக சங்க பதிவுகள்

மேற்குறிப்பிட்ட வழிமுறைகளைப் பின்பற்றி உங்கள் பாடசாலையில் ஊடக சங்க பொறுப்பாசிரியரின் வழிநடத்தலில் பாடசாலை அதிபரின் மேற்பார்வையின் கீழ் ஊடக சங்கமொன்றை அமைத்து பதவி நிலைகள், உறுப்பினர் குழுவினர், விபரங்கள், உள்ளக,வெளியக குழுவினரின் பெயர், முகவரி விபரங்களையும் குறிப்பிட்டு வருடாந்த வேலைத்திட்டத்தின் நகல் பிரதியொன்றையும் அனுப்பி வைக்கவும்.

**அனுப்ப வேண்டிய முகவரி:**
**தேசிய மாணவர் ஊடக தலைமையகம்**
**'விஜய்'**
**இல: 8, ஹுனுபிட்டிய குறுக்கு வீதி,**
**கொழும்பு-02.**

இது தொடர்பான மேலதிக விபரங்களை தேசிய கல்வி நிறுவகத்தின் பாடசாலை ஊடக கல்வித்திட்டத்தினரிடமோ அல்லது 'விஜய்' மாணவர் ஊடக மத்திய நிலையத்திடமே தொடர்பு கொண்டு கேட்டறிந்து கொள்ளமுடியும்.

**பந்துல பி.தயாரத்ன - தலைவர்**
**(தேசிய கல்வி நிறுவகம்)**
**011-2851301/304**
**தேசிய மாணவர் ஊடக மத்திய நிலையம்**
**5383653**

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# தரம்-5 புலமைப்பரிசில் பரீட்சை குறித்து ஆராய கல்வி அதிகாரிகள் குழு நியமனம்



நடந்து முடிந்த ஐந்தாம் ஆண்டுப் புலமைப்பரிசில் பரீட்சை உட்பட தொடர்ந்து ஐந்து வருடங்களாக நடைபெற்று வருகின்ற புலமைப் பரிசில் பரீட்சைகளானது, மாணவர்களைப் பெரும் உள ரீதியான பாதிப்புகளுக்கு ஆளாக்கி வருகின்றதாக பெற்றோர்களாலும் கல்வித்துறை சார்ந்தோராலும் பல்வேறுபட்ட முறையீடுகள் தெரிவிக்கப்பட்டு வருகின்றன. இதனை அடுத்து இது தொடர்பிலான கலந்துரையாடலொன்று கடந்த மாதம் கல்வி அமைச்சின் கேட்போர் கூடத்தில் பிரதிக் கல்வி அமைச்சர் எம்.சச்சிதானந்தன் தலைமையில் நடைபெற்றது.

அங்கு பிரதிக் கல்வி அமைச்சர் கருத்துத் தெரிவிக்கையில்; மேற்படி பரீட்சைக்குத் தோற்றும் மாணவர்கள் பல்வேறு அசௌகரியங்களை எதிர்நோக்குவதாக எனக்கு பல முறையீடுகள் தெரிவிக்கப்பட்டுள்ளன. எனவே, இதன் உண்மை நிலையைக் கண்டறிய வேண்டியது எனது அமைச்சின் பொறுப்பாகும். ஆகவே, இது குறித்து ஆராய்ந்து, அறிக்கையொன்றை சமர்ப்பிப்பதற்காக கல்வித்துறை சார்ந்த 12 அதிகாரிகளைக் கொண்ட குழுவொன்றை நியமித்துள்ளதாகக் கூறியுள்ளார். இக்குழுவானது கடந்த 5 வருட வினாத்தாள்களின் உள்ளடக்கம், கற்றல்-கற்பித்தலில் மாணவர்கள் எதிர்நோக்கும் அசௌகரியங்கள், வினாத்தாள்களில் கையாளப்பட்டுள்ள மொழி நடை, மாணவர்களின் மன இயல்புகள், இதனை சரிசெய்வதற்கான விதந்துரைகள் மற்றும் இப் பரீட்சை தொடர்பான ஏனைய விடயங்கள் குறித்தும் ஆராய்ந்து அறிக்கை சமர்ப்பிக்கும் எனவும் அவர் மேலும் தெரிவித்துள்ளார்.

# உலகின் கவனத்தை ஈர்த்திருக்கும் பென்டாக்கள்



மூங்கில்களைத் தமது பிரதான உணவாகக் கொண்டு வாழ்ந்து வரும் 'பென்டாக்கள்' குறித்து உலக விலங்கியல் விஞ்ஞானிகளின் கவனம் திரும்பியுள்ளது. சீனாவின் தேசிய விலங்காக இனங்காணப்படுகின்ற பென்டாக்களின் தொடர்ச்சியான அழிவுதான் இவ்வாறு உலக விலங்கியல் விஞ்ஞானிகளின் கவனம் பென்டாக்களின் பக்கம் திசை திரும்பப் பிரதான காரணியாக இருக்கின்றது.

பென்டாக்கள் அருகி வரும் விலங்கினப் பட்டியலில் ஏலவே இடம்பிடித்திருக்கின்றன. எனினும், சீன அரசு இவற்றை அழிவிலிருந்து காப்பதற்காக காலம் காலமாக பல்வேறு நடவடிக்கைகளை எடுத்து வந்துள்ளது. தற்போது இதற்கென உலக வனஜீவிகள் நிதியத்தின் கீழ் விசேட செயற்றிட்டமொன்றையும் ஆரம்பித்துள்ளது.



சீன அரசு தற்போது மேற்கொண்டு வருகின்ற புதிய செயற்றிட்டத்திற்கமைய 28,725 சதுர கிலோமீற்றர் நிலப்பரப்பில் மூங்கில்களை வளர்த்து பென்டாக்கள் பாதுகாக்கப்பட்டும் வருகின்றன. அத்துடன், பென்டாக்கள் குறித்து அந்நாட்டு மக்களைத் தெளிவுபடுத்துமுகமாக விழிப்புணர்வு நிகழ்ச்சிகளும் நடத்தப்பட்டு வருகின்றன.

**Operation Panda** எனப் பெயரிடப்பட்டுள்ள இந்த புதிய பாதுகாப்பு செயற்றிட்டம் குறித்து அமெரிக்க விலங்கியல் விஞ்ஞானியான ஜோர்ஜ் ஷோலர் மற்றும் சீன விலங்கியல் விஞ்ஞானியான ஜீளி ஷூ என்பவரும் பல வருடங்களாக ஆய்வுகளை மேற்கொண்டு வருகின்றனர். அவர்கள் பென்டாக்கள் குறித்த ஆய்வுகளை மேற்கொள்ளும் போது உயிரிழந்த பென்டாக்களின் எச்சங்கள் மியன்மார் மற்றும் வியட்நாம் நாடுகளின் சில பிரதேசங்களில் இருந்தும் கண்டுபிடிக்கப்பட்டுள்ளன. இதனை அடுத்து இந்த நாடுகளிலும் பென்டாக்கள் வாழ்ந்துள்ளமை தெரியவந்துள்ளது.

வெள்ளை மற்றும் கறுப்பு நிறம் கலந்த, பஞ்சு போன்ற அடர்த்தியான ரோமங்களைக் கொண்ட உடலமைப்பையுடைய சாதுவான விலங்கினமாக பென்டாக்களை இனங்காட்டலாம். இவை பார்ப்பவர்களை விரைவில் கவர்ந்து விடக்கூடியவை.

சீனாவின் மேற்குப் பிரதேச மேட்டு நிலங்களில் வாழும் பென்டாக்களுக்கும் மூங்கில் தாவரத்துக்கும் இடையில் நெருங்கிய தொடர்பு இருக்கின்றது எனக் கூறும் நவீன ஆய்வுகள், பென்டாவின் கையிலுள்ள ஆறாவது விரலானது மூங்கிலை இறுகப் பற்றிப் பிடிப்பதற்காகவே அமைந்துள்ளது எனவும் தெரிவிக்கின்றது. பென்டா ஒன்றுக்கு ஒரு நாளைக்கு சாதாரணமாக 10-20 கிலோகிராம் வரையிலான மூங்கில் இலைகள் உணவுக்காகத் தேவைப்படுகின்றது.

அதிகரித்து வரும் புவி வெப்பமும் சூழல் மாசடைதலும் மூங்கில் தாவர வளர்ச்சியில் தாக்கம் விளைவிக்கும் அதேவேளை, அவை பென்டாக்களின் வாழ்க்கையையும் விட்டு வைக்கவில்லை என்பது இதிலிருந்து புலனாகின்றது.

-ஜீநு

# இலங்கையில் காசநோயாளிகளின் எண்ணிக்கை அதிகரிப்பு

நாடு முழுவதும் 1017 பேர் காசநோயினால் பாதிக்கப்பட்டு, சிகிச்சை பெற்று வருவதாக கொழும்பு தேசிய காசநோய் கட்டுப்பாட்டு நிலையம், 2008 ஓகஸ்ட் மாதம் வெளியிட்டுள்ள புள்ளி விபரத்தின் மூலம் தெரிய வந்துள்ளது.



முன்னைய ஆண்டுகளை விட இவ்வாண்டில் பாதிக்கப்பட்டுள்ளவர்களின் எண்ணிக்கை அதிகரித்துள்ளமை இதன் மூலம் உறுதிப்படுத்தப்பட்டுள்ளது.


அத்துடன், நாட்டின் அனைத்து மாவட்டங்களிலிருந்தும் காசநோயாளிகள் இனங்காணப்பட்டுள்ளனர். காசநோயை ஆரம்பத்திலேயே இனங்கண்டு, நோயின் ஆரம்ப கட்டத்தில் அதற்குரிய சிகிச்சை முறைகளைத் தவறாது பெறுவதன் மூலம் அதனைப் பூரணமாகக் குணப்படுத்திக் கொள்ளலாம் என்பதும் குறிப்பிடத்தக்கது.

Vijey விஜய்
விஜய நியூஸ்பேப்பர்ஸ் லிமிட்டெட்
08, ஹுணுப்பிட்டிய குறுக்கு வீதி,
கொழும்பு - 02
தொலைபேசி: 2479653,
மின்னஞ்சல்: Vijey @ Wijeya.lk

October 9th World POST DAY
தபால் மூல ஆங்கில பாடநெறி ENGLISH Course
நீங்கள் இருக்கும் இடத்தில் இருந்தவாரே எம்முடன் இணைந்து ஆங்கிலத்தை சரளமாகவும் தெளிவாகவும் கற்றுக் கொள்ள முடியும்
* கிளாஸ் போகும் காலம் நேரம் மிகுதி / வீண் கட்டணங்கள் இல்லை
* குருகிய காலம் என்பதால் 1 மாதத்தில் பாடநெறியை முடிப்பதால் பயன் இல்லை
* அடிப்படையில் இருந்தே கற்றுக்கொடுக்கப்படும்
பாடநெறியில் இணையும் அணைவருக்கும் அழகிய பேக் ஒன்றும் Tigo Sim Card (தொலைபேசி இணைப்பு) ஒன்றும் வழங்கப்படும்
முதல் இணையும் 500 மாணவ/மாணவிகளுக்கு மாத்திரமே Tigo Sim ஒன்று இலவசம்
இந்த Diploma சான்றிதழ் உங்கள் கல்வித்துறை, மற்றும் தொழில் வாய்ப்புக்கு வெளிநாட்டு வேலை வாய்ப்புக்கு துணையாக அமையும்
மேலதிக விபரங்களுக்கு பெயர், முகவரியுடன் 15/= பெறுமதியான 2 முத்திரை அனுப்பி பெறலாம்
UNION EDUCATIONAL INSTITUTE
P.O. BOX 143, KANDY, SRI LANKA. Tel: 0773 123 523,0817 918 981
மாற்று வழிகளிலோ, மறைமுகமான கட்டணங்களோ அறவிடப்படமாட்டாது.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# நெம்புகோலால் உலகையே நிமிர்த்துவதாகக் கூறிய ஆக்கிமிடிஸ்



அமீர் ஹுஸைசன்

ஆக்கிமிடிஸ் பற்றிக் கேள்விப் பட்டுள்ளோம். அவர் ஒரு புகழ் பெற்ற விஞ்ஞானியும் கண்டுபிடிப்பாளருமாவார். பொறியியலாளராக பிரபல்யம் பெற்ற ஆக்கிமிடிஸின் தந்தை ஒரு வானியல் ஆராய்ச்சியாளராவார். சுதந்திரமாகப் பொழுதைக் கழிப்பதிலும் சிந்திப்பதிலும் ஆக்கிமிடிஸ் அதிக ஆர்வம் காட்டினார். அன்றைய காலகட்டத்தில் அதிகமான விஞ்ஞானிகளும் அறிஞர்களும் அவர்களது கண்டுபிடிப்புக்களையும் ஆராய்ச்சிகளையும் மேற்கொள்வதற்காக எகிப்திய மன்னர்களின் உதவிகளைப் பெற்று வந்தனர்.

இத்தாலியின் சிராகுங் நகரத்தில் பிறந்த இவர் அலெக்சாந்திரியாவில் தனது ஆரம்பக் கல்வியைக் கற்றார். இத்துடன், தனது முயற்சிகளை சுயமாக எவரது உதவியும் இன்றியே மேற்கொண்டார். எகிப்திய மன்னர்களிடம் உதவி பெறுவதை அவர் விரும்பவில்லை. அலெக்சாந்திரியாவில் தமது கல்வியை பூர்த்தி செய்த இவர் மீண்டும் பிறந்த ஊருக்கு திரும்பி அங்கே தமது ஆய்வுப் பணிகளை மேற்கொண்டார்.

## தங்க ஒட்டகம்

சிராகுங் நகரத்தின் அரசனான சிராகுங் இரண்டாம் மன்னனுக்கும் ஆக்கிமிடிசுக்கும் இடையில் நெருக்கமான உறவு நிலவியது. அரசன் அவரின் எல்லா அலுவல்கள் தொடர்பாக ஆக்கிமிடிஸிடமே ஆலோசனை பெற்று வந்ததோடு தனது திட்டங்களையும் அவரிடம் தெரிவிப்பதை வழக்கமாகக் கொண்டிருந்தார்.

முழுமையாக தங்கத்தால் செய்யப்பட்ட ஒட்டகம் கலப்படம் இன்றி தூய தங்கத்தால் செய்யப்பட்டிருக்கின்றதா? என்பதைக் கண்டறியும் எண்ணம் மன்னனுக்கு ஏற்பட்டது. ஒட்டகத்திற்கு எதுவிதமான சேதமும் ஏற்படாமல் முழுமையாக தங்கத்தால் செய்யப்பட்டுள்ளதா? அல்லது வேறு உலோகக் கலப்படம் இருக்கின்றதா? என்பதை பரிசோதிக்க வேண்டிய தேவை ஏற்பட்டது. இவ்விடயம் தொடர்பாக ஆக்கிமிடிஸ் தனது சிந்தனையைச் செலுத்தி வந்தார். அந்த சந்தர்ப்பத்தில் ஒருநாள் நீர் நிரம்பிய தொட்டியில் குளிப்பதற்காக இறங்கும்போது நீர் வெளியே கொட்டுவதை ஆக்கிமிடிஸ் அவதானித்தார். அப்போது, வெளியே கொட்டிய நீரின் அளவானது தனது உடலின்



நிறைக்கு (பாரத்திற்கு) நிகரானதாக இருக்கலாம் என்று சிந்தித்தார். இதன்படி அந்த ஒட்டகத்தையும் நீர் நிரம்பிய தொட்டியினுள் இறக்கும்போது அந்தத் தொட்டியில் இருந்து வெளிப்படும் நீரின் நிறையையும் கொண்டு ஒட்டகத்தின் எடையைக் கணிக்கலாம் என்று கருதினார்.

இவ்வாறாக நிறையை கண்டறியும் விதியை ஆக்கிமிடிஸ் கண்டுபிடித்தார். இதனால், ஆச்சரியமும் மகிழ்ச்சியும் அடைந்த ஆக்கிமிடிஸ் 'யுரேகா, யுரேகா' என்று சப்தமிட்டவாறு மன்னரின் அரண்மனைக்கு ஓடினார். யுரேகா என்பது கிரேக்க மொழியில் 'வெற்றி' என்று அர்த்தமாகும். அவரின் இந்த ஆய்வின் இறுதியில் அந்த ஒட்டகம் வெள்ளி கலந்த ஒன்று என்பது ஊர்ஜிதம் செய்யப்பட்டது. பின்னர் ஒட்டகத்தை உருவாக்கிய சிற்பிக்கு அரசன் மரண தண்டனை விதித்தார். விஞ்ஞானத்தில் அன்று முதல் இன்று வரையில் புதிய கண்டுபிடிப்பைக் குறிப்பதற்காக 'யுரேகா' என்ற சொல் பயன்படுத்தப்படுகின்றது.

## லிவர்/நெம்புகோல்

'லிவர்' என்பது வேலையை இலகுவாக்கப் பயன்படுத்தும் உபகரணமாகும். இம்முறையை முதலில் பயன்படுத்தியவர் ஸ்ரேட்டோ (Strato) ஆவார். ஆனால், அதுபற்றிய கணித முறையைப் பயன்படுத்தி பரிசோதனையை மேற்கொண்டவர் ஆக்கிமிடிஸ் ஆவார்.



இந்த லிவர் என்னும் வலு சுமக்கும் அல்லது நகர்த்தும் உபகரணம் பற்றி ஆக்கிமிடிஸ் குறிப்பிடுகையில் 'எனக்கு எனது 'லிவரை' வைப்பதற்கும் நின்று கொள்வதற்கும் ஓர் இடம் தாருங்கள். அதன் துணையுடன் இந்த பூமியையே தூக்கி வேறோர் இடத்தில் வைக்கிறேன்'' என்றார். இதனைக் கேள்வியுற்ற அவர் வாழ்ந்த காலத்து அரசன் கப்பல் ஒன்றைத் தூக்குமாறு சவால் விட்டான்.

'லிவர்' மற்றும் கம்பியின் உதவியுடன் அவர் நிலத்தில் அமர்ந்து கொண்டே அக்கப்பலை துறைமுகத்தில் இருந்து தூக்கி கரையில் வைத்தார்.

## கண்டுபிடிப்புக்கள்

ஆக்கிமிடிஸ் விஞ்ஞான மற்றும் கணிதவியல் வளர்ச்சிக்கும் செயற்பாட்டிற்கும் அரிய பல பங்களிப்புகளைச் செய்துள்ளார். சுமைதாங்கும் கம்பி மற்றும் கோள் மண்டல சிந்தனைகள் என்பன ஆக்கிமிடிஸின் கண்டுபிடிப்புக்களே.

## திடீர் மரணம்

ஆக்கிமிடிஸின் அந்திம காலத்தை அவரால் நிம்மதியாகக் கழிக்க முடியவில்லை. அத்தருணத்தில் அவர் போரியல் நிபுணராக பிரசித்தம் பெற்றிருந்தார். அக்காலப் பகுதியில் சிராகுங் பிரதேசத்தை இரண்டாவது ஹீரன் மன்னனின் பேரன் ஆட்சி செய்தார். ரோம் கதேஜ் பிராந்தியத்துடன் போரிட்டபோது அம்மன்னர் ஹீரனிமஸ் கதேஜுக்கு ஆதரவாக செயல்பட்டான்.

அதனால், கோபம் கொண்ட ரோமப் பேரரசன், ஹீரனிமஸைப் பிடிப்பதற்காக பெரும் கடற்படையொன்றை சிராகுங்கிற்கு அனுப்பினான். அந்த யுத்தம் மூன்று வருடங்கள் நீடித்தது. அப்போரில் ஆக்கிமிடிஸின் யுத்த தந்திரோபாயங்களும் அவரால் தயாரிக்கப்பட்ட ஆயுதங்களும் பயன்படுத்தப்பட்டன. பிரமாண்டமான தளவாடியைப் பயன்படுத்தி சூரிய ஒளியைப் பாய்ச்சி கடலில் இந்த பிரமாண்டமான கப்பல்கள் மூழ்கடிக்கப்பட்டன.

ஈற்றில் ரோமப் படைகள் போரில் வெற்றி கொண்டு நாட்டுக்குள் நுழைந்தனர். அப்போது ஆக்கிமிடிஸ் கணிதவியல் பிரச்சினையொன்றுக்கு தீர்வு தேடும் முயற்சியில் ஈடுபட்டுக் கொண்டிருந்தார். அப்போது ரோமப் படை வீரர் ஒருவர் ஆக்கிமிடிஸை எழுந்து நிற்குமாறு கட்டளையிட்டபோதும் ஆக்கிமிடிஸ் அதனைப் பொருட்படுத்தாது அவரின் கடமையில் ஈடுபட்டிருந்தார். அச்சந்தர்ப்பத்தில் கோபாவேசம் அடைந்த அப்போர் வீரன் அவனின் கையில் இருந்த ஆயுதத்தால் ஆக்கிமிடிஸை தாக்கிக் கொலை செய்துவிட்டான்.

## இறுதி அஞ்சலி

ஆனால், ரோமப் படைத் தளபதியின் கட்டளையாக இருந்தது 'ஆக்கிமிடிஸ் பெறுமதி வாய்ந்த மனிதர் அவரைச் கொலை செய்யக்கூடாது'' என்பதாகும். அவரைக் கௌரவமாகப் பிடித்து தம்மிடம் அழைத்து வருமாறும் கட்டளை பிறப்பித்திருந்தான். இருந்தபோதிலும் போர் வீரர்கள் ஆக்கிமிடிஸை அடையாளம் கண்டுகொள்ளாததால் அவரைப் படுகொலை செய்துவிட்டனர். அவர் படுகொலை செய்யப்பட்டதைக் கேட்ட ரோமத் தளபதி வேதனை அடைந்ததோடு அவரின் இறுதிக்கிரியைகளை இராணுவ மரியாதையுடன் நடத்துமாறு உத்தரவிட்டார்.

உலகிற்கு விஞ்ஞான கணிதவியல் அறிவை வழங்கிய மாமேதை கி.மு 212 இல் சிராகுங் நகரல் மீளாத்துயிலில் ஆழ்ந்தார்.






## ஆக்கிமிடிஸ் விதி


**திரவத்தின் முழுமையான அல்லது ஓரளவுக்கு எடை உடைய பொருளை அமிழ்த்தும்போது வெளியேறும் நீரின் அளவு அந்த அமுக்கத்திற்கு காரணமான பொருளின் நிறைக்குச் சமம்.**

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



# விண்வெளிச் சுற்றுலா

**வளர்ந்து வரும் தொழில்நுட்பம் காரணமாக விண்வெளி தொடர்பான பயணங்களைப் பாதுகாப்பானதாகவும் குறைந்தளவு செலவுடனும் மேற்கொள்ள முடியும் என அமெரிக்க மற்றும் இத்தாலிய விண்வெளி ஆராய்ச்சியாளர்கள் எதிர்வு கூறியிருப்பதாக இப்பகுதியினூடாக உங்களுக்கு ஏற்கனவே அறியத்தந்திருந்தோம்.**



இதற்கேற்ப தற்போது, அமெரிக்காவின் Space Adventures நிறுவனமும் ரஷ்யாவின் Russian Aviation and Space Agency நிறுவனமும் சேர்ந்து போட்டி போட்டுக் கொண்டு விண்வெளிச் சுற்றுலா செல்ல ஆட்களைப் பதிவு செய்வதில் முனைப்புடன் செயலாற்றி வருவதாகத் தெரிவிக்கப்படுகின்றது. 2001 இல் அமெரிக்கத் தொழிலதிபர் டென்னிஸ் டிட்டோ, ரஷ்ய சோயுஸ் (Soyuz) விண்கலத்தில் விண்வெளிச் சுற்றுலா சென்றார். இதற்காக ரஷ்ய அரசுக்கு இவர் 16 மில்லியன் டொலர் செலுத்தியுள்ளார். இவர்தான் உலகின் முதலாவது விண்வெளிச் சுற்றுலாப் பயணி என்றும் கூறப்படுகின்றது. அதற்கடுத்த ஆண்டில் மார்க் ஷட்டில் வோர்த் என்ற தெற்காசியரும் 2005இல் கிரகரிஎல்சன் என்ற அமெரிக்கரும் விண்வெளிக்குச் சுற்றுலா சென்றுள்ளனர்.

அமெரிக்காவில் தொழில் புரியும் ஈரானியரான அனுஷ்கேக் அன்சாரி தான் விண்வெளிச் சுற்றுலாப் பயணம் செய்த முதலாவது பெண்மணி என்ற புகழைப் பெறுகின்றார். இவர் 2006 ஆம் ஆண்டு ரஷ்யாவின் Soyuz என்ற விண்கலம் மூலம் விண்வெளிக்குச் சுற்றுப்பயணம் சென்றார். அங்கு இவர் 11 நாட்கள் தங்கியிருந்தார். இவர்கள் அனைவரும் விண்வெளி ஆய்வுக்காகச் சென்ற விண்வெளி வீரர்களுடன் இணைந்தே பயணித்திருந்தனர். மேலும், இது ரஷ்யாவின் அரச போக்குவரத்துக் கழகத்துடன் இணைந்த பயணமாகவே அமைந்திருந்தது. தற்போது தான் அது தனியார் வர்த்தக சுற்றுப் பயணமாக உருவெடுத்துள்ளது.


அதன்படி, ரிச்சர்ட் ஃபிரான்சன் என்ற அமெரிக்கர் தனது Virgin Airlines சார்பாக விண்வெளிச் சுற்றுலா நிறுவனமொன்றை (Virgin Galactic LLC) ஆரம்பித்திருக்கிறார். இந்த ஆண்டின் இறுதியில் விண்வெளிச் சுற்றுலாவை நடைமுறைப்படுத்தி, சுற்றுலாவில் கலந்து கொள்ளவுள்ள பயணிகள் எதிர்வரும் புத்தாண்டை விண்வெளியில் கொண்டாடச் செய்வதே இவரது திட்டமாகும். இவரின் ஏற்பாட்டினூடாக குவியத் தொடங்கிய வருமானத்தைப் பார்த்து British Airways, Hilton போன்ற பிரபல நிறுவனங்களும் விண்வெளியில் போக்குவரத்துத் திட்டங்களை தீட்டி வருகின்றன. இந்த தனியார் துறை சார்ந்த விண்வெளிச் சுற்றுலாவுக்கு 'மைக்ரோசொஃப்ட்' அதிபர் பில்கேட்ஸ் மற்றும் 'கூகுல்' இணையத்தளத்தின் இணை நிறுவனர் சேர்கே பிரின், கொம்ப்யூட்டர் கேம்ஸை வடிவமைத்த ரிச்சர்ட் கெரியோட் உள்ளிட்ட பலர் தலா 100 கோடி வரை கட்டணம் செலுத்தி இச்சுற்றுலாவிற்கு முன்பதிவு செய்துள்ளனர்.



விண்வெளிக்கு சுற்றுலா செல்ல வயது ஒரு தடையில்லை. விண்வெளிக் கலம் பூமியின் ஈர்ப்பு சக்தியிலிருந்து விடுபட்டு உயரே செல்லும் போதும், விண்வெளியிலிருந்து பூமியின் ஈர்ப்பு சக்திக்குள் நுழையும்போதும் கடும் அவஸ்தையை உணர நேரிடும். விண்வெளியில் இருக்கும்போது போதுமான அழுத்தம் இல்லாததால் இந்த விதமான சிரமங்கள் ஏற்படும். ஆகவே, பயணிகளுக்கு இதையெல்லாம் சமாளிக்கத் தேவையான பயிற்சிகளும் வழங்கப்படும். அத்துடன், விண்வெளிப் பயணத்துக்கு முன்னர் உடல் ஆரோக்கியம் குறித்தும் சோதனைகள் நடத்தப்படுகின்றன.

விண்வெளிக்கு சுற்றுலாச் செல்பவர்கள் அணியத்தக்க, ஒக்சிஜன் பிறப்பிக்கக்கூடிய உடைகளை எரி மட்சுயி எனும் ஆடை வடிவமைப்பாளர் தயாரித்து வருகிறார். சிறிய விண்கற்கள், கதிரியக்கம், கடும் குளிர் போன்றவற்றிலிருந்து பாதுகாக்கக்கூடியதாக இந்த உடை இருக்கும் என்பது குறிப்பிடத்தக்கது.

## விண்வெளிக்குச் சென்றால்.....



புவியிலிருந்து 60 மைல் உயரத்துக்கு மேல் ஈர்ப்பு விசை இருக்காது. இதுவே, 'விண்வெளி' என்று குறிப்பிடப்படுகிறது. இந்த உயரத்துக்கு மேல் 140 மைல் உயரத்தில் தான் சர்வதேச விண்வெளி நிலையம் (International Space Station) அமைக்கப்பட்டுள்ளது.

பல நாடுகளின் கூட்டு முயற்சியின் பேரில் இந்த நிலையம் அமைக்கப்பட்டுள்ளது. இந்த விண்வெளி நிலையத்தின் எடை 200 டொன் ஆகும். 1,800 சதுர அடியில் மூன்று படுக்கை அறைகளும் 8 அடி உயரத்தில் கூரையும் அமைக்கப்பட்டுள்ளது.

விண்வெளி வீரர்கள் ஓய்வு எடுப்பதற்கான வசதிகள் இங்கு இருப்பதோடு, ஆய்வகம் ஒன்றும் இதன் கூடவே உள்ளது.



## சாதனை படைத்த சீன விண்வெளி வீரர்கள்

**கடந்த செப்டெம்பர் மாதம் 25 ஆம் திகதி வடமேற்கு சீனாவின் Jiuquan விண்வெளி மையத்திலிருந்து Shenzhou VII என்ற விண்கலம் மூலம் விண்வெளிக்குச் சென்ற மூன்று விண்வெளி வீரர்களும் கடந்த செப்டெம்பர் மாதம் 28 ஆம் திகதி தமது விண்வெளி ஆய்வினை நிறைவு செய்து பூமிக்குத் திரும்பியுள்ளனர். விண்வெளியிலிருந்து பூமியை வந்தடையும் ஓடத்தினூடாக பூமியின் வளிமண்டலத்தை வந்தடைந்த இவர்கள், அங்கிருந்து 'பெரகூட்டின்' மூலம் தரையிறங்கியுள்ளனர்.**

**இந்த விண்வெளிப் பயணத்தில் கலந்து கொண்ட விண்வெளி வீரர்களுள் ஒருவரான ஸோய் ஸிகேங் விண்வெளியில் நடந்து சாதனையும் படைத்துள்ளார்.**

**சீனாவின் முதலாவது விண்கலம் 2003 ஆம் ஆண்டில் தான் விண்ணில் செலுத்தப்பட்டது. இதில் சீனாவின் முதலாவது விண்வெளி வீரரான யாங் லிவே பயணித்திருந்தார். அதனை அடுத்து 2005 ஆம் ஆண்டில் இரண்டு விண்வெளி வீரர்களுடனான மற்றுமொரு விண்கலம் விண்ணில் ஏவப்பட்டது என்பதும் குறிப்பிடத்தக்கது.**

October 9th World POST DAY

60 நாட்களில் தபால் மூல ஆங்கில பாடநெறி

இலகுவாக ஆங்கிலம் கற்றுக் கொள்ள விரும்பும் அனைவருக்கும் சிறந்த வழிகாட்டி English Language யின் தபால் மூல ஆங்கில பாடநெறிகள்.

BASIC/SPOKEN ENGLISH & DIPLOMA IN ENGLISH

அடிப்படையில் இருந்த தமிழ் விளக்கத்துடன் கற்றுக் கொடுக்கப்படும் தமிழ் எழுத வாசிக்க தெரிந்து இருந்தால் போதுமானது.



60 நாட்களின் அங்கீகரிக்கப்பட்ட Diploma சான்றிதழ் ஒன்றும்

FREE FREE இலவசம் இலவசம் பாடநெறியில் இணையும் அனைவருக்கும்

* இலவச 30 days Easy Way English Book Part1




இலங்கையின் எப்பாகத்தில் இருந்தும் எம்முடன் இணைய முடியும்

பாடநெறியில் இணைய வயது கட்டுபாடோ, ஆங்கில முன் அறிவோ தேவையில்லை. பாடசாலை மாணவர்கள், தொழில் புரிவோர், தொழில் வாய்ப்பு எதிர்பார்க்கும், இல்லத்தரசிகள் என யாவருக்கும் இணைய முடியும்.

மேலதிக விபரங்களுக்கு 10/- பெறுமதியான 3 முத்திரைகள் அனுப்பி பெறலாம்.

THE ENGLISH LANGUAGE INSTITUTE
P.O. BOX 83, KANDY. Tel: 081-5615561, 0777-220002

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# விழிப்படையுங்கள்!

காலத்திற்குக் காலம் நாம் வாழும் சூழல் வெகுவாகவும் வேகமாகவும் மாற்றமடைந்து வருகின்றது. ஒரு பருவத்தில் மழையே இல்லாமலும் மற்றொரு பருவத்தில் வழமைக்கு மாறாக அதிக மழை பெய்வதையும் காண்கிறோம்.

இத்தகைய ஒரு மழைக் காலத்தில் பல்வேறு நோய்கள் குறித்து பலவிதமான தகவல்களை அறிகிறோம். அதன்படி இக்காலத்தில் அதிக மானோரின் கவனத்தை ஈர்த்ததும்



ஊடகங்களில் அடிக்கடி இடம் பெறுவதுமான ஒரு நோய்தான் 'எலிக்காய்ச்சல்'.

## அதிகரித்து வரும் எலிக்காய்ச்சல்

நாட்டில் பல்வேறு பகுதிகளில் கடந்த ஆண்டோடு ஒப்பிடும்போது எலிக்காய்ச்சலால் பீடிக்கப்படுவோரும் அதனால் மரணமடைவோரும் பல மடங்காக அதிகரித்துள்ளனர். கடந்த வருடம் எலிக்காய்ச்சலால் 34 பேர் மாத்திரமே இறந்தனர். ஆனால், இவ்வருடம் ஜனவரி முதல் ஒகஸ்ட் வரையிலான 8 மாதங்களில் மாத்திரம் 137 பேர் எலிக்காய்ச்சலால் மரணமடைந்துள்ளனர். இது கடந்த ஆண்டு மரணமானோர் தொகையுடன் ஒப்பிடும் போது நான்கு மடங்கிற்கும் அதிகமாகும். ஏறக்குறைய 4000 த்திற்கும் மேற்பட்டோர் எலிக்காய்ச்சலால் பீடிக்கப்பட்டுள்ளனர் என்பதும் முக்கிய விடயமாகும். இத்தொகை மேலும் விரிவாக அதிகரித்துச் செல்கின்றது. கொழும்பு, கம்பஹா, கண்டி, குருநாகல், கேகாலை, மாத்தறை, அநுராதபுரம், அம்பாந்தோட்டை ஆகிய மாவட்டங்களில் எலிக்காய்ச்சலால் பீடிக்கப்பட்டோர் தொகை அதிகமாகும்.

## நாட்டுக்கு தாக்கத்தை ஏற்படுத்தும் விதம்

'லெப்டொஸ்பைரோசிஸ்' அல்லது 'எலிக்காய்ச்சல்' உலகெங்கும் உள்ள ஒரு நோயாகும். இதில் வெப்ப, இடைவெப்ப வலய நாடுகளில் இந்நோய் மிக அதிகமாகக் காணப்படுகின்றது. இலங்கையைப் பொறுத்தவரையில் முதன்முதலாக 'லெப்டொஸ்பைரோசிஸ்' எனும் எலிக்காய்ச்சல் 1953 ஆம் ஆண்டிலிருந்தே ஏற்பட்டதாக தகவல்கள் தெரிவிக்கின்றன.

## எலிக்காய்ச்சல் என்பது


நாம் பொதுவாக இந்த நோயை 'எலிக்காய்ச்சல்' என அழைத்தாலும் 'லெப்டொஸ்பைரோசிஸ்' என்பதே இந்நோயின் பெயராகும். 'லெப்டொஸ்பைரா' எனும் பக்றீரியாவால் இந்நோய் ஏற்படுகின்றது.

## நோயை ஏற்படுத்துவோர் யார்?

நாம் மேலே குறிப்பிட்ட 'லெப்டொஸ்பைரா' பக்றீரியாக் கிருமிகள் பண்ணைகளில் உள்ள மிருகங்கள், நாய்கள், காடுகளில் வாழும் முலையூட்டிகள் போன்ற மிருகங்களின் சிறுநீரகத்தில் இயல்பாகவே காணப்படுகின்றன. இந்த பக்றீரியாக்கள் மனிதனுள் செல்வதனால் மனிதனுக்கும் இந்நோய் ஏற்படுகின்றது. இதன் அடிப்படையில் பார்த்தால் 'லெப்டொஸ் பைரோஸ்' மிருகங்கள் மூலம் ஏற்படும் ஒரு நோயாகும்.

## செல்லப்பிராணிகளாலும் இந்நோய் ஏற்படுமா?


எலிகள் மற்றும் பெருச்சாலிகளில் உள்ள லெப்டோஸ் கிருமி வகைகள் மனிதனுக்கு மிக மோசமான விளைவுகளை ஏற்படுத்தும் நோய்களைப் பரப்புகின்றன. எமது வீடுகளில் நாம்




# பரவுகிறது எ

வளர்க்கும் செல்லப்பிராணிகளுக்கு இயல்பாகவே இந்நோய் ஏற்படுவதில்லை. எனினும், 'லெப்டொஸ்பைரா' பக்றீரியா உள்ள மிருகங்களின் சிறுநீர் கலந்த மண், நீர், உணவு என்பனவற்றில் ஏதாவதொன்று மேற்படி கிருமி செல்லப்பிராணி

| வருடம் | நோயாளிகள் |
|---|---|
| 2000 | 1134 |
| 2001 | 1399 |
| 2002 | 992 |
| 2003 | 2234 |
| 2004 | 1447 |
| 2005 | 1550 |
| 2006 | 1582 |
| 2007 | 2195 |
| 2008 ஜனவரி-ஏப்ரல் வரை | 1147 |




களினுள் உள்வாங்கப்பட்டால் அச்செல்லப்பிராணிகளின் சிறுநீருடன் இவ்வகை பக்றீரியா மனிதனை அடையும். மனிதனை மட்டுமல்ல ஏனைய மிருகங்களையும் அடைவதால் மனிதனுக்கும் ஏனைய மிருகங்களுக்கும் நோய் தொற்றிக் கொள்கின்றது.



## லெப்டொஸ்பைராக்கள் உடலினுள் பிரவேசித்தல்

முக்கியமாக எலிகள், மாடுகள், ஆடுகள், நாய்கள், பூனைகள், பன்றிகள் முதலிய மிருகங்களின் சிறுநீர் மூலம் வெளியேற்றப்படும் நோய்க் கிருமிகள், வயல்கள் சதுப்பு நிலங்கள் மற்றும் அவைகளை அண்டிய பிரதேசங்களிலும் பண்ணைகளிலும் காணப்படும். இச்சிறுநீரால் மாசடைந்த நீர், உணவு, மண் என்பன மனித உடலுக்குள் மிகச் சுலபமாக உள்வாங்கப்படும்.

எமது உடலில் அதாவது தோலில் சிறு காயங்கள், கீறல்கள், மிகச்சிறிய உராய்வுகள் அல்லது உடலின் துவாரங்களான மூக்கு, வாய், கண், குதம் ஆகியவற்றினூடாகவும் நோய்க்கிருமிகள் உடலினுள் செல்லும். மாசடைந்த நீரைப் பருகுவதாலும் இந்நோய் ஏற்படலாம். இப்பக்றீரியாக்கள் குருதிச் சுற்றோட்டத்தில் கலந்து உடலின் சகல அவயங்களையும் ஆக்கிரமிக்கும்.


## நோயரும்பு காலம்

பக்றீரியா உடலினுள் சென்று 5 முதல் 14 நாட்கள் வரையிலான காலப்பகுதியினுள் நோய்க்குரிய அறிகுறிகள் வெளிப்படும்.

நோயை உறுதி செய்தல்

- நோய்க்குரிய அறிகுறிகளை அறிந்து கொள்ளல்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



✱ உடல் பரிசோதனை (உதாரணமாக MAT)

✱ சிறுநீர் பரிசோதனை (அல்பியூமின் புரோட்டின் இருத்தல்)

✱ இரத்தப் பரிசோதனை (வெண்குருதிச் சிறுதுணிக்கைகளின் அதிகரிப்பு)

ஆகியவற்றில் அல்லது அயல் பிரதேசங்களில் வேலை செய்பவர்கள் நோயிலிருந்து பாதுகாப்பதற்காக, நோய் வருவதைத் தவிர்க்கும் பொருட்டு மருந்தினை பெற்றுக்கொள்ள பிரதேச சுகாதார வைத்திய அதிகாரியைச் சந்திப்பது மிகப் பொருத்தமானதாகும்.

## ஒரு முறைக்கு மேல் நோய் ஏற்படுமா?

ஆம். ஒருமுறை இந்த நோய் ஏற்பட்ட பின் நோயெதிர்ப்புச் சக்தி போதியளவு உடலில் இருக்கும் வரை மீண்டும் இந்த நோய் மீண்டும் ஏற்படாது. எனினும், நோயைத் தவிர்ப்பதற்குரிய எதிர்ப்புச்சக்தி உடலில் இல்லாவிட்டால் நோய் மீண்டும் ஏற்பட வாய்ப்புண்டு.

## லெப்டொஸ்பைரோசிஸ் வராமல் தடுப்போம்

✱ குப்பை கூழங்களை அகற்றி சுற்றுச்சூழலை சுத்தமாக வைத்திருத்தல்.

✱ எலிகள் நடமாடாத வகையில் வீட்டுச்சூழலை உருவாக்குதல்.

✱ வீட்டைச் சுற்றி, வீட்டுத்தோட்டம், விளையாட்டு மைதானம் உள்ளிட்ட குழந்தைகள், சிறுவர் நடமாடும் பிரதேசங்களில் மிருகங்கள் நடமாடுவதைத் தவிர்த்தல்.


✱ பாதுகாப்பான உடை, பாதணிகளை தேவையேற்படின் உரிய இடத்தில் அணிதல், உதாரணமாக சதுப்பு நிலங்களில் வேலை செய்யும் பொழுது முழங்கால் வரை மூடக்கூடிய பாதணிகளையும் கையுறைகளையும் அணிந்து அசுத்த நீர் உட்புகா வண்ணம் காயங்களை மூடுதல்.

✱ வாய், கண் உள்ளிட்ட அனைத்து துவாரங்கள் ஊடாக வயல், சதுப்பு நிலநீர் உட்செல்லவோ, உறிஞ்சவோ வாய்ப்பளிக்கக்கூடாது.

✱ கொதித்தாறிய நீரையே அருந்த வேண்டும்.

✱ வெள்ளத்தில் நடமாடுவதையோ, பயணிப்பதையோ தவிர்த்தல்.

✱ நீர் நன்றாகப் பெருக்கெடுத்து ஓடாத நீர் நிலைகள், சதுப்பு நிலங்கள், வயல்வெளி, மழைநீர் தேங்கி நிற்கும் இடங்களில் கை, கால்களைக் கழுவுதல், குளித்தல், மீன் பிடித்தல், விளையாடுதல் போன்ற அனைத்து செயற்பாடுகளையும் முற்றாகத் தவிர்த்தல். இது விடயத்தில் சிறுவர்கள், மாணவர்கள் அதிக அக்கறை செலுத்துவதோடு பெற்றோர்களும் அக்கறை செலுத்தவேண்டும்.



# லிக்காய்ச்சல்



## நிவாரணம் பெறுதல்

எலிக்காய்ச்சல் நோய் தீவிரமடையக் கூடியதாகையால் உரிய சிகிச்சை பெறுதல் மிக அவசியமாகும். நோயெனச் சந்தேகம் ஏற்பட்டால் உடனடியாக அதற்குரிய சிகிச்சையை ஆரம்பிக்க வேண்டும்.

## நீங்கள் இருப்பது நோய் பரவும் பிரதேசமாயின்

தலைவலி, தசைப்பகுதியில் வலி ஏற்படுதல், கண்கள் செந்நிறமாதல், வாந்தி முதலிய நோய்க்குரிய அறிகுறிகள் தென்பட்டால் உடனடியாக வைத்தியரை நாடி உரிய ஆலோசனைகளைப் பெற்றுக்கொள்ளவும்.

✱ வயல், சதுப்பு நிலம் மற்றும் விலங்குப் பண்ணைகளில் தொழில்புரிவோர் அல்லது அதில் நடமாடுவோருக்கு மேற்கூறிய அறிகுறிகளுடன் கண்கள் மஞ்சள் நிறமானால், வெளியேறும் அல்லது கழிக்கும் சிறுநீரின் அளவு குறைந்தால், சிறுநீர் மண் நிறமாக இருந்தால், சுவாசிப்பதற்கு சிரமம் ஏற்பட்டால் அது நோய் அதிகரித்த பின் ஏற்படும் நிலையாகும். அதாவது இரண்டாம் நிலைக்குரிய அறிகுறிகளாகும். அச்சந்தர்ப்பத்தில் தவறாது உடனடியாக நோயாளி வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட வேண்டும்.

✱ வயல்கள், சதுப்பு நிலங்கள், விலங்குப் பண்ணைகள்

## எலிக்காய்ச்சல் ஏற்படும் காலம்

இலங்கையில் வருடம் முழுவதும் இந்நோய் ஏற்பட்டதற்கான தகவல்கள் கிடைக்கின்றன. எனினும், அதிக மழைவீழ்ச்சியுடன் காணப்படும் காலங்கள் தொற்று நோய்கள் பரவுவதற்கு கூடிய சந்தர்ப்பங்களைக் கொண்ட காலமாகும். வெள்ளப்பெருக்கு மக்கள் வாழும் பல்வேறு பகுதிகளில் ஏற்படுவதால் சிறுநீர் அவற்றில் கலந்து மாசடைகின்றது.

இதனால், பருவக்காற்று மழைக்காலமாகிய மார்ச் முதல் மே வரையிலான காலப் பகுதியிலும் ஒக்டோபர் முதல் டிசம்பர் வரையிலான காலப் பகுதியிலும் பெருமளவிலானோர் நோயால் பீடிக்கப்படும் காலமாகக் கருதப்படுகின்றது.



## நோயின் குணங்குறிகள் (அறிகுறிகள்)

✱ காய்ச்சல், கடுமையான தலைவலி, தசைப்பகுதிகளில் வலி (குறிப்பாக முதுகுப் பகுதி) குளிர், கண்சிவத்தல், வாந்தி என்பன ஆரம்ப அறிகுறிகளாகும்.

✱ கண்கள் மஞ்சள் நிறமாதல், சிறுநீர் வெளியேறுவதன் அளவு குறைதல். சிறுநீர் மண்நிறமாக மாறுதல், சுவாசிப்பதற்கு சிரமம் ஏற்படல் போன்றவை அடுத்த கட்டமாக ஏற்படும் அறிகுறியாகும்.

## மரணம் விளைவிக்கும் ஆட்கொல்லி நோய்க்குரிய அறிகுறிகளாக மாறலாம்

சாதாரண காய்ச்சலில் ஆரம்பித்து மோசமான நோய்க்குரிய அறிகுறிகளைக் காட்டி ஈற்றில் மரணம் விளைவிக்கும் நோய்க்குரிய இலட்சணங்களாக மாறலாம். நோயாளிகளில் 5% முதல் 30% வரை மரணம் சம்பவிக்கின்றது. சிறுநீரகம் செயலிழத்தல், இருதயம் செயலிழத்தல், குருதிச்சுற்றோட்டம் பாதிப்படைதல் என்பன மரணம் சம்பவிப்பதற்கு பிரதான காரணங்களாகும்.

## அன்பான வேண்டுகோள்

நாம் அறியாதவற்றைத் தேடி அறிந்து கொள்வதும் தெரிந்தவை குறித்து மென்மேலும் தகவல்களை அறிந்து கொள்வதும் எமக்கு மிகவும் பயனளிப்பவையாகும். எலிக்காய்ச்சல் எனும் 'லெப்டொஸ்பைரோசிஸ்' நோயும் அத்தகையதே. அந்த வகையில் சிறுவர்களாகிய நீங்கள் தெரிந்து கொண்ட இந்த நோய் பற்றிய பல விடயங்களை, இதுபற்றி அறியாத உங்கள் நண்பர்களுக்கும் சகோதரர்களுக்கும் அயலவர்களுக்கும் ஏன் பெரியவர்களுக்கும் கூட தெரிவிக்க மறக்க வேண்டாம். அப்பொழுது நோய் ஏற்படாமல் தவிர்க்கவும் மக்களின் உயிரைக் காப்பாற்றவும் முடியும். மேலும், இத்தொல்லை தரும் நோயை எமது நாட்டில் கட்டுப்படுத்தவும் இல்லாதொழிக்கவும் முடியும்.

இரஞ்சித் ஜெயகர்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# நீங்களும் சிறந்த அறிவிப்பாளர் ஆகலாம்

எந்தவொரு வேலையை செய்வதற்கும் அது தொடர்பான அறிவு அவசியமாகும். இந்த அறிவும் அனுபவமும் எதிர்காலத்தில் எமக்கு பெரும் உதவியாக இருக்கும். இந்த வகையில் ஊடகங்களில் பணியாற்றுவது தொடர்பில் உங்களில் பலருக்கும் மிகுந்த ஆர்வம் இருக்கும். ஊடகங்களில் அறிவிப்பாளர்களின் பணி முக்கிய இடத்தை வகிக்கின்றது. ஆகவே, உங்களின் அந்த ஆர்வத்தை நிறைவேற்றிக் கொள்ள முன்கூட்டியே சில விடயங்களை நீங்கள் அறிந்து வைத்திருப்பது சாலச் சிறந்தது.



## அறிவிப்பாளர் என்பவர் யார்?

அறிவிப்பாளர் என்ற சொல்லுக்கு பல அர்த்தங்கள் உண்டு. ஒரு விடயத்தை அறிவிப்பு செய்பவரே அறிவிப்பாளர் என்று நாம் இலகுவான அர்த்தம் கொள்ளலாம். தவிர, தொடர்புபடுத்துபவர், செய்தி ஒன்றினை வழங்குபவர் என்றும் குறிப்பிட முடியும்.

## பல்வேறு அறிவிப்பாளர்கள்

அறிவிப்பாளர்களை பல இடங்களில் சந்திக்கலாம். தொலைக்காட்சி,வானொலி, உள்ளக-வெளியரங்கு என பல நிலைகளில் அறிவிப்பு செய்பவர்களாக இவர்கள் இருப்பார்கள். இடங்களை பொறுத்தும் அங்கு அவர்கள் செய்யும் அறிவிப்புகளைப் பொறுத்தும் அறிவிப்பாளர்களின் பணிகள் வித்தியாசப்படும். உதாரணமாக,

- **செய்தி அறிவிப்பாளர்.**
- **அறிக்கைகளை வாசிப்பவர்.**
- **வர்த்தக விளம்பரங்களை அறிவிப்பவர்.**
- **நிகழ்ச்சிகளை அறிவிப்பவர்.**
- **பேட்டி காண்பவர்.**
- **நேரடி விவரணங்களை அறிவிப்பவர்.**

என அறிவிப்பு நிலைகளில் வேறுபாடு இருக்கும். ஊடகங்களிலும் இந்நிலையைக் காணலாம். குறிப்பாக தொலைக்காட்சி அறிவிப்பாளரொருவரின் தோற்றம், குரல், முக பாவனைகள் என்பன பார்வையாளர்களின் தீவிர அவதானத்தைப் பெறுகின்றன. வானொலியில் அறிவிப்பாளரின் குரல் முக்கிய இடத்தைப் பெறுகின்றது. ஆகவே, அறிவிப்பாளர் ஒருவர் இவ்விரு சந்தர்ப்பங்களையும் மனதிற் கொண்டு செயற்பட வேண்டும்.

## அறிவிப்பாளருக்குரிய இயல்புகள்



அறிவிப்பாளர் எப்பொழுதும் ரசிகர்களின் கவனத்தினை ஈர்க்க வேண்டும். தனக்கு வழங்கப்பட்டுள்ள நேரத்தில் அவர் தனது திறமையாலும் இயலுமைகளினாலும் ரசிகர்களின் மனதைக் கட்டிப்போடும் அளவுக்கு அறிவிப்புப் பணியை செய்ய வேண்டும். இதற்கு அறிவிப்பாளர் சில இயல்புகளைக் கொண்டிருக்க வேண்டும்.

- தான் செய்யும் விடயம் குறித்த அறிவு.
- குறிப்பிட்ட விடயத்தினை தெளிவாகவும் மற்றவர்கள் புரிந்து கொள்ளும் விதத்தில் தெரியப்படுத்தும் ஆற்றல்.
- மொழி அறிவு, சிறந்த மொழி உச்சரிப்பு ஆகிய திறமைகளைக் கொண்டிருத்தல்.
- தான் அறிவிக்கும் விடயம் குறித்து மேலதிக விபரங்களை அறிந்து கொள்ளல்.
- சரியான தகவல்களைப் பெற்றுக்கொள்வதற்காக தகவல்களை திரட்டல், புத்தகங்களை வாசித்தல், அறிவாளிகளுடனான நட்பு பாராட்டுதல்.
- பலவீனமான விடயங்கள் குறித்து முழுமையான பார்வையை பெறுதல்.
- தன் பக்கம் அனைவரின் கவனத்தையும் தக்கவைத்துக் கொள்ளல்.

## பயிற்சிக்கு உகந்த இடங்கள்

அறிவிப்புப் பணியினை மிகவும் பொறுப்புடன் செய்ய வேண்டும். ஆகவே, அதற்காக நீங்கள் பயிற்சி எடுத்துக்கொள்ளக்கூடிய சந்தர்ப்பங்கள் உங்களைச் சூழவே இருக்கின்றன. உங்கள் பாடசாலை காலைக் கூட்டம், பாடசாலையின் இலக்கியக் கூட்டம், சமயக் கூட்டங்கள் போன்றவற்றில் பங்குபற்றுவதனால் உங்களால் அறிவிப்புத் திறமையை வளர்த்துக் கொள்ளமுடியும். இவ்வாறான நிகழ்வுகளில் பங்குபற்றுவதனால் வெட்கம், பயம், அச்ச உணர்வு என்பன உங்களை விட்டும் விலகி விடும். இதனூடாக உங்கள் அறிவிப்புத் திறனும் அதிகரிக்கும்.

## மொழி அறிவினை வளர்த்துக் கொள்வோம்

உரைகளை நிகழ்த்துவதில் திறன் பெறவேண்டுமாயின் நாம் மொழியில் தேர்ச்சி பெற்றிருக்க வேண்டும். மொழியில் தேர்ச்சி பெற்றவருக்கு சிறந்த அறிவிப்பாளராகும் வாய்ப்பு அதிகமாகும். அத்துடன், வாசிப்புப் பழக்கம், உரை நிகழ்த்தும் திறன், எழுதும் திறன், செவிமடுக்கும் திறன் ஆகிய நான்கு திறன்களையும் வளர்த்துக் கொள்வதும் அவசியமாகும். இந்தத் திறன்களைப் பொதுவாக அனைவரும் வளர்த்துக் கொள்வதில் எந்தத் தவறும் இல்லை.

## செய்யக் கூடாதவை

அறிவிப்பாளர் செய்யக் கூடாத விடயங்கள் என்றும் சில உள்ளன. ஓர் அறிவிப்பாளரின் பாணியினை இன்னொருவர் பின்பற்றக் கூடாது. தனக்கென ஒரு பாணியை வடிவமைத்துக் கொண்டு தனித்துவமாக செயற்பட வேண்டும். எதையும் அலட்சியமாகக் கருதக் கூடாது. நேயர்களுடனான உரையாடல்களில் அவர்களின் மனதை அறிவிப்பாளர் புண்படுத்துவதாக இருக்கக்கூடாது. தான் சொல்லவந்த விடயம் தொடர்பில் முன்கூட்டியே ஆயத்தம் செய்திருக்க வேண்டும். விபரங்கள் தெரியாதவராக இருக்கக் கூடாது. எல்லாச் சந்தர்ப்பங்களிலும் ஒரே மாதிரியாக அறிவிப்பை செய்யக் கூடாது. சந்தர்ப்பங்களைப் பொறுத்து அறிவிப்பு செய்யும் பாணியிலும் மாற்றங்கள் இருக்கவேண்டும்.

## சமூக முக்கியத்துவம்

பிற தொழில்களைப் போன்றே அறிவிப்பாளர் என்ற தொழிலும் சமூக முக்கியத்துவம் மிக்கதாகும். அறிவிப்பாளர் சமூகத்திற்கு வழிகாட்டுபவராக திகழ்கின்றார். அதனால், எப்பொழுதும் பொறுப்புடன் நடக்க வேண்டியது அவசியமாகும். தாம் வெளிப்படுத்தும் விடயங்கள் சிலவேளைகளில் சிறந்த முன்னுதாரணத்தையும் வழங்கக்கூடிய தன்மை கொண்டது. பிறரில் சிறந்த குணவியல்புகளை வளர்த்து விடும் திறமையும் அறிவிப்பாளருக்கு அவசியமாகிறது. எனவே, அவற்றைக் கருத்தில் கொண்டு நீங்களும் செயற்பட்டால் நாளை நீங்களும் சிறந்த அறிவிப்பாளரே.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



# எண்ணங்களை பரிமாறிக் கொள்ள இலகு வழியமைத்த அஞ்சல் சேவை



உலகில் அனுஷ்டிக்கப்பட்டு வரும் பல்வேறு ஞாபகார்த்த தினங்களில் ஒக்டோபர் 9 ஆம் திகதி அனுஷ்டிக்கப்படும் 'சர்வதேச அஞ்சல் தினம்' முக்கியத்துவம் வாய்ந்தது எனலாம். உலகின் வடதுருவத்திலிருந்து ஒருவரின் மனதில் தோன்றும் எண்ணங்களை தென்துருவத்திலுள்ள ஒருவரின் எண்ணங்களோடு பகிர்ந்து கொள்ளும் அல்லது பரிமாறிக் கொள்ளும் வழிகளில் மிகவும் முக்கியமான வழிதான் இந்த அஞ்சல் சேவை. அதே போன்று மனித சமூகத்தின் பலதரப்பட்ட அபிவிருத்திப் பணிகளில் முக்கியமான சேவையாகத் திகழும் அஞ்சல் சேவைக்கு நிகர் அஞ்சல் சேவையேயாகும். எவ்வளவுதான் தொழில்நுட்பம் வளர்ச்சியடைந்தாலும் எவ்வளவு விரைவாக செய்திகள் பரிமாறப்பட்டாலும் ஒரு செய்தியின் மூலப்பிரதி (Original) அஞ்சல் மூலமே பரிமாறப்பட வேண்டும். எனவேதான் தொலைத் தொடர்புத்துறையில் அஞ்சலின் நிலை இன்றும் நிலைத்திருக்கிறது எனலாம். இந்தத் தொடர்பு சர்வதேச ரீதியாகப் பரிமாறப்படுவதற்கு வழி அமைத்துக் கொடுத்த நிறுவனமே சர்வதேச அஞ்சல் சங்கமாகும். இந்த சங்கத்தை உருவாக்குவதற்காக சர்வதேச ரீதியாக முதன்முதலில் ஒப்பந்தம் கைச்சாத்திடப்பட்ட தினமே உலக அஞ்சல் தினமாக அனுஷ்டிக்கப்பட்டு வருகிறது.

**சர்வதேச அஞ்சல் தினம் ஒக்டோபர் 09**





## சர்வதேச அஞ்சல் சங்கத்தின் வரலாறு

### நோக்கம்

தபால் சேவை மூலம் மக்களுக்கிடையில் தொடர்புகளை ஏற்படுத்தி அதன் மூலம் சமூக, கலாசார, பொருளாதார விடயங்களில் தொடர்புகளை ஏற்படுத்துவது இச்சங்கத்தின் நோக்கமாகும்.


### ஆரம்பம்

பல தசாப்தங்களுக்கு முன் கடிதத் தொடர்பு ஐரோப்பாவில் ராஜகுடும்பங்கள், உயர் கல்விக்கூடங்கள், சமயப் பெரியார்கள் மத்தியில் மாத்திரம் மட்டுப்படுத்தப் பட்டிருந்தது. பின்னர் சர்வதேச ரீதியில் செய்திகளைப் பரிமாறிக்கொள்ளும் பொருட்டு ஒஸ்திரியா, ஜேர்மன், நெதர்லாந்து, ஸ்பெய்ன், இத்தாலி, பிரான்ஸ் ஆகிய ஆறு நாடுகளுக்கிடையே 16 ஆம் நூற்றாண்டில் முதன் முதலாக ஒருங்கிணைப்பு ஒப்பந்தம் ஒன்று செய்து கொள்ளப்பட்டது.

இதற்கிடையில் ஒவ்வொரு நாடுகள் மூலமும் வெளிநாட்டுத் தபால்களுக்கு பல முறைகளில் அஞ்சல் கட்டணம் அறவிடுவதில் ஏற்பட்ட பிரச்சினைகளை தவிர்த்துக் கொள்ளும் பொருட்டும் பொது அஞ்சல் கட்டணமுறையை அறிமுகப்படுத்தும் பொருட்டும் பிரித்தானியாவில் ரோலன்ட் ஹில் (Rawland Hill) என்ற ஆங்கில ஆசிரியரினால் 1840 ஆம் ஆண்டு (Penny black) 'பெனிபிலெக்' என்ற பெயரில் அஞ்சல் முத்திரை ஒன்று முதன் முதலாக அறிமுகப்படுத்தப்பட்டது.

அதனைத் தொடர்ந்து ஐக்கிய அமெரிக்காவில் அஞ்சல் மா அதிபதியாக இருந்த 'மொன்டி கோமரி பிளயர்' அவர்களின் முன்னெடுப்பில் 1863 ஆம் ஆண்டு பிரான்ஸ் நாட்டின் தலைநகரமான பாரிஸ் நகரில் சமூகங்கள் மத்தியில் அஞ்சல் நடவடிக்கைகளின் முன்னேற்றம் சம்பந்தமாக 15 நாடுகளுடன் ஓர் ஒப்பந்தம் ஏற்படுத்தப்பட்டது. என்றாலும் இந்த ஒப்பந்தத்தின் மூலம் முழு உலக நாடுகளுக்கும் மக்கள் விரும்பிய படி கடிதம் அனுப்பும் அனுமதியை அல்லது உரிமையை பெற்றுக்கொள்ள முடியாது என்று உணரப்பட்டது. இந்த நிலைமையை சரியாக உணர்ந்து கொண்ட அப்போதைய ஜேர்மன் நாட்டு அஞ்சல் துறை மேலதிகாரிகளில் ஒருவரான 'ஹென்ரிச் வொன் ஸ்டீபன்' என்பவரினால் உலக நாடுகள் அனைத்திற்கும் பொருந்தும் அல்லது கடைப்பிக்கும்படியான ஒரே மார்க்கம் அறிமுகப் படுத்தப்பட வேண்டியதன் அவசியம் உணர்த்தப்பட்டது. இதுபற்றி உலகத்தின் கவனம் ஈர்க்கப்பட்டது. அவருடைய ஆலோசனைக்கு அமைய 1874.09.15 அன்று சுவிட்சர்லாந்து நாட்டின் பர்ண் நகரத்தில் அந்த நாட்டு அரசின் ஆதரவுடன் 22 நாடுகளின் அஞ்சல் முகவர்களின் ஏகமனதான தீர்மானத்தின்படி 'பேர்ன்' ஒப்பந்தம் (Berne Treaty) கைச்சாத்திடப்பட்டது. இதன் பிரகாரம் ஜெனரல் போஸ்டல் யூனியன் (General Postal Union) என்ற பெயரில் சர்வதேச அஞ்சல் சங்கம் பேர்ன் நகரில் ஸ்தாபிக்கப்பட்டது. ஜெனரல் போஸ்டல் யூனியன் என்ற பெயரில் ஸ்தாபிக்கப்பட்ட G.P.U 1878 ஆம் ஆண்டு தொடக்கம் 'சர்வதேச அஞ்சல் சங்கம்' (Universal Postal Union) என்று அழைக்கப்படுகின்றது.





சர்வதேச அஞ்சல் சங்கத்தின் பேராளர் மாநாடு ஐந்து வருடங்களுக்கு ஒருமுறை கூடும். இம் மாநாட்டில் உறுப்புரிமை நாடுகளின் பிரதிநிதிகள் அனைவரும் பங்கு கொள்ளமுடியும். இம்மாநாட்டில் சங்கத்தின் எதிர்கால செயற்றிட்டங்கள் நிறைவேற்றிக் கொள்ளப்படுவதுடன் எதிர்வரும் ஐந்து வருடத்திற்கான நிதியும் ஒதுக்கிக் கொள்ளப் படுகிறது.

அங்கத்துவ நாடுகளிலிருந்து 40 நாடுகள் இதில் அங்கம் வகிக்கும். இந்நாடுகள் ஒவ்வொரு வருடமும் கூட வேண்டும். காங்கிரஸின் நடவடிக்கைகளை ஒருங்கிணைத்தல், நீதி நிர்வாகம் சம்பந்தமான பிரச்சினைகள் கலந்தாலோசிக்கப்பட்டு தீர்வினை மும்மொழிதல் இப்பணியகத்தின் கடமையாகும்.

முதலாளித்துவ நாடுகளில் 35 நாடுகள் இந்த அமைப்பில் அங்கம் வகிக்கும். வருடந்தோறும் இந்நாடுகள் கூடி, அபிவிருத்தி அடைந்த, அபிவிருத்தி அடைந்து வரும் நாடுகளின் தொழில்நுட்பம் சம்பந்தமான நடவடிக்கைகளைப் பரிசீலித்தல் இதன் கடமையாகும்.

சங்கம் உருவாக்கப்பட்டதிலிருந்து பணியகம் செயற்படுவது சுவிட்சர்லாந்திலாகும். சர்வதேச அஞ்சல் சங்கம் சம்பந்தமான சகல நடவடிக்கைகளையும் ஒருங்கிணைத்து செயற்படுவது இதன் பணியாகும்.

**U.L.M.முஸ்தபா,**
**பிரதி பிரதான உபதேசகர்**
**அஞ்சல் பயிற்சி நிலையம்**
**கண்டி.**

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# நெதர்லாந்து



## அமைவிடம்

வடமேற்கு ஐரோப்பாவில் அமைந்துள்ள நெதர்லாந்து, வடக்கேயும் மேற்கேயும் வட கடலையும் தெற்கில் பெல்ஜியத்தையும் கிழக்கில் ஜேர்மனியையும் எல்லைகளாகக் கொண்டுள்ளது. இந்த நாடானது 'ஒல்லாந்து' என்ற பெயராலும் அழைக்கப்படுகின்றது.



நெதர்லாந்து 12 நிர்வாகப் பிரிவுகளைக் கொண்ட நாடாகும். கடல் மட்டத்திலிருந்து உயரம் குறைந்த தாழ்ந்த பிரதேசங்களை கணிசமான அளவு கொண்ட இந்நாட்டில் கடலோரக் காலநிலை நிலவுகின்றது. 'கரீபியன்' கடலில் அமையப் பெற்றுள்ள அரும்பா, நெதர்லாண்ட் ஆன்டிலிஸ் போன்ற தீவுகளை நெதர்லாந்து இன்றும் தனது ஆதிக்கத்தின் கீழ் வைத்துள்ளது.





ஆம்ஸ்டர்டேம், சட்டர்டேம், உட்ரெக்ட், டில்பர்க் என்பன மிகப் பெரிய நகரங்களாகும். ரீன், வால், அவுத்ரிஜன், மாஸ் என்பன நாட்டின் முக்கிய ஆறுகளாகும்.

## சனத்தொகை

பல்வேறு ஜனநாயக உரிமைகள் நிறைந்த நாடாகும். இங்கு வாழ்பவர்களில் பெரும்பான்மையானோர் ஒல்லாந்தர்களாவர். ஏனையோர் துருக்கியரும் மொரோக்கோ நாட்டினரும் ஆவர்.

சமய ரீதியில் ரோமன் கத்தோலிக்கம், ஒல்லாந்த சீர்திருத்த திருச்சபை (Dutch Reform Church), கெல்வின் கிறிஸ்தவ சபை, இஸ்லாம் ஆகிய மதங்களைப் பின்பற்றுகின்றனர்.

## வரலாறு

பண்டைய காலத்தில் ஜேர்மன் கோத்திரத்தாராகிய நர்வி, பிரிசி, பட்டாவி ஆகிய இனக்குழுக்கள் வாழ்ந்த இந்தப் பூமி, 4 ஆம் நூற்றாண்டில் இருந்து 8 ஆம் நூற்றாண்டு வரையிலான காலகட்டத்தில் ஜேர்மனிய 'புருன்க்ஸ்' கோத்திரத்தாரால் ஆளப்பட்டது. 8 ஆம், 9 ஆம் நூற்றாண்டுகளில் கார்ல்மெக்னஸ் சக்கரவர்த்தியின் சாம்ராஜ்யத்தின் கீழ் கொண்டு வரப்பட்டது.

| | |
|---|---|
| தலைநகர் | : ஆம்ஸ்டர்டேம் |
| பெரிய நகரம் | : ஆம்ஸ்டர்டேம் |
| அரச கருமமொழி | : டச்சு மொழி (ஒல்லாந்த மொழி) |
| அரசு | : நாடாளுமன்ற ஜனநாயகம் மற்றும் அரசியலமைப்புக்குட்பட்ட முடியாட்சி. |
| அரசி | : பியட்ரிக்ஸ் |
| பிரதமர் | : ஜேன் பீட்டர் பெல்கென்ட் |
| மொத்த நிலப்பரப்பு | : 41,526 சதுர கிலோமீற்றர். இதில் 18.41% நன்னீர்த் தேக்கங்களாகும். |
| சனத்தொகை (2007 இன் படி) | : 16,402, 835 |
| நாணயம் | : யூரோ |
| சர்வதேச தொலைபேசி இலக்கம் | : +31 |

அதன் பின்னர் முறையே பிரான்ஸிய பர்கன்ட், ஆஸ்திரியாவின் ஹப்ஸ்பேர்க் அரச வம்சத்தினரின் கைகளுக்கு நெதர்லாந்தின் ஆட்சி அதிகாரம் சென்று, இறுதியில் 16 ஆம் நூற்றாண்டில் ஸ்பானிய ஆட்சியின் கீழ் கொண்டு வரப்பட்டது. அப்போதைய ஸ்பானிய மன்னனாகிய இரண்டாம் பிலிப் அவர்களால் இந்நாடு அரசியல் ரீதியிலும் மத ரீதியிலும் புரட்டஸ்தாந்து கிறிஸ்தவ சபைக்கு எதிராக செயல்பட்டதால் ஒல்லாந்து எனும் சுதந்திர நாடு உருவாக காரணமாய் அமைந்தது. 17 ஆம் நூற்றாண்டில் ஒல்லாந்த குடியரசுக்கும் ஸ்பெய்ன் நாட்டுக்கும் இடையில் யுத்தம் ஆரம்பமாகி, 1648 இல் முடிவுற்றது. இதனையடுத்து ஸ்பெய்ன் ஒல்லாந்தை தனி சுதந்திர நாடாக ஏற்றுக்கொண்டது.

1814 இல் நெதர்லாந்தும் பெல்ஜியமும் ஒரே இராச்சியமாக ஒன்றுபட்டது. எனினும், 1830 இல் பெல்ஜியம் கூட்டு இராச்சியத்தில் இருந்து பிரிந்து சுதந்திர நாடாகியது.

1848 இல் நெதர்லாந்து தனக்கே உரித்தான அரசியலமைப்பொன்றை நிறைவேற்றியது. முதலாவது உலக யுத்தத்தில் பக்கச்சார்பற்ற நடு நிலைமைக் கொள்கையைப் பின்பற்றிய நெதர்லாந்து, 1940 மே மாதம் ஜேர்மனியின் நாசிப்படைகளினால் ஆக்கிரமிக்கப்பட்டது. எனினும், 1945 மே மாதம் அவர்கள் மீண்டும் தமது சுதந்திரத்தை நிலைநாட்டிக் கொண்டனர்.




## பொருளாதாரம்

வளம்மிக்க கைத்தொழில் நாடாக விளங்கும் நெதர்லாந்து, அந்நிய நாடுகளுடனான தனது வர்த்தகத் தொடர்பை சிறப்பாக மேற்கொண்டு வருகின்றது. திறந்த பொருளாதாரம் நிலவுவதோடு ஏற்றுமதியினூடாக சிறந்த இலாபத்தை ஈட்டுகின்றது. விவசாயத்தில் நவீன இயந்திரங்களையும் தொழில்நுட்பங்களையும் பயன்படுத்துகின்றது. அத்துடன், சீஸ் (Cheese) உற்பத்திக்காக வளர்க்கப்படும் மாடுகளும் அதன் உற்பத்திப் பொருட்களும் மிகவும் தரம் வாய்ந்தவை.


✱ **பிரதான கைத்தொழில் உற்பத்திகள்:** ஆடைகள், இலத்திரனியல் உபகரணங்கள், இலத்திரனியல் உதிரிப்பாகங்கள், போக்குவரத்து சாதனங்கள், இரும்பு மற்றும் உருக்கு, பெற்றோலியம், கப்பல், உணவு உற்பத்தி, பிளாஸ்டிக் மற்றும் இரசாயனத் திரவியங்கள்.

✱ **ஏற்றுமதிப் பொருட்கள்:** இலத்திரனியல் உபகரணங்கள், ஆடைகள், பெற்றோலிய உற்பத்தி, காய்கறி, பழங்கள் மற்றும் இறைச்சி.

## உலகின் பூக்கடை

ஆம்ஸ்டர்டேமின் தென்மேற்கே 13 கிலோமீற்றர் தொலைவிலுள்ள ஆம்ஸ்மீர் எனும் நகரத்தில்தான் உலகின் மிகப் பெரிய பூ ஏலச் சந்தை அமைந்துள்ளது. பல்லாயிரக்கணக்கான பூ வண்டிகள், பூ விமானங்கள் இங்கிருந்து உலகின் பல பாகங்களுக்கும் பூக்களை சுமந்து செல்கின்றன. தற்பொழுது நாளொன்றுக்கு 2.20 கோடி பூக்களும் செடிகளும் இங்கு விற்பனையாகின்றன. இந்த பூ ஏலச் சந்தையானது உலகின் மிகப் பெரும் வர்த்தக நிலையம் என 'கின்னஸில்' பதியப்பட்டுள்ளது.









noolaham.org | aavanaham.org

# தலைமுடியை உலர்த்தும் ஹெயார் டிரயார் கருவி தொழிற்படும் விதம்



குளித்த பின்னர் ஈரமான தலைமுடியை உலர்த்துவதற்காக 'ஹெயார் டிரயர்' எனப்படும் கருவி பயன்படுத்தப்படுவதை நீங்கள் பார்த்திருப்பீர்கள். இந்த 'ஹெயார் டிரயர்' கருவி எவ்வாறு அமைக்கப்பட்டுள்ளது. அது எவ்வாறு இயங்குகின்றது என்பது உங்களுக்குத் தெரியுமா?

தலைமுடியை விரைவாக உலர வைப்பதற்காக 'ஹெயார் டிரயரில்' உள்ள விசிறி மூலமே காற்று வெளிச் செலுத்தப்படுகிறது. இந்தக் காற்றுத்தான் ஈரத்தை ஈர்த்து தலைமுடியை விரைவாக உலர வைக்கிறது. இதை மேலும் விரைவுபடுத்துவதற்காகவே 'ஹெயார் டிரயரில்' ஒரு 'ஹீட்டர்' உபயோகப்படுத்தப்படுகிறது. 'ஹெயார் டிரயரின்' விசிறி மூலம் 'ஹீட்டர்' வழியாகக் காற்று செலுத்தப்படும்போது அளவான வெப்பத்துடன் கூடிய காற்று ஈரமான முடிகளில் ஊடுருவுகிறது. இது வேகமாக முடியை உலரச் செய்கிறது.

அத்துடன், கூடுதலாக விசிறியின் வேகத்தைக் கட்டுப்படுத்துவதற்கான சுவிட்சும் 'ஹெயார் டிரயரில்' அமைந்திருக்கும். சில 'ஹெயார் டிரயர்களில்' 'ஹீட்டரின்' வெப்பநிலையைக் கட்டுப்படுத்துவதற்கான அழுத்தி அமைக்கப்பட்டிருப்பதையும் காணலாம்.

தலைமுடியை உலர்த்த சூடான காற்று உதவினாலும், 60 டிகிரி செல்சியஸுக்கு அதிகமான வெப்பநிலை முடியையும் அதன் வேர்ப்பகுதியையும் பாதிக்கும். எனவே, தரமான 'ஹெயார் டிரயர்களில்' வெப்பநிலை கட்டுப்பாட்டு அமைப்பு இருக்கும். இது இரு உலோகங்கள் கலந்ததாக இருக்கும். வெப்பநிலை அளவுக்கு அதிகமாக அதிகரிக்கும்போது இந்த உலோகப் பட்டை வளைந்து, ஹீட்டருக்கான மின் தொடர்பைத் துண்டிக்கிறது.

'ஹெயார் டிரயருக்குள்' காற்று செல்வதற்கான வழியில் ஒரு வலைத் தடுப்பு அமைப்புள்ளது. இது, தலைமுடி போன்றவை உள்ளுக்குள் இழுக்கப்படுவதைத் தடுக்கிறது.

'ஹெயார் டிரயருக்குள்' அதிக வெப்பநிலை ஏற்படுவதால், அதைப் பயன்படுத்துவோருக்குப் பாதிப்பு ஏற்படாமல் இருக்க அதன் வாய்ப்பகுதியும், வெளிப்பகுதியும் வெப்பம் கடத்தாத வகையில் உருவாக்கப்படுகின்றமையும் குறிப்பிடத்தக்கது.



## உலகின் ஆழமான நீச்சல் தடாகம்



உலகில் அதிக ஆழமான நீச்சல் தடாகம் பெல்ஜியம் நாட்டின் பிரசல்ஸ் நகரில் அமைக்கப்பட்டுள்ளது. 'நீமோ 33' என்ற பெயரைக் கொண்ட நீச்சல் தடாகத் தொகுதிகளின் ஓர் அங்கமாகவே மேற்படி நீச்சல் தடாகம் அமைக்கப்பட்டுள்ளது.

இதற்கமைய, நீரில் ஆழம் கூடிய பகுதிக்குச் செல்லச் செல்ல ஏற்படுகின்ற காற்றழுத்த மாற்றங்களை ஆய்வு செய்வதற்கு ஆழ்கடலுக்குள் செல்ல வேண்டிய அவசியம் அற்றுப் போகின்றது. எனவே, 16 அடியும் 32 அடியும் என இரண்டு விதமான ஆழங்களைக் கொண்ட வகையில் இந்த தடாகம் அமைக்கப்பட்டுள்ளது. 'குளோரின்' கலந்த நீர் ஊற்றெடுக்கும் வகையிலான அமைப்பு முறையில் இந்த தடாகம் அமைக்கப்பட்டுள்ளமையும் ஒரு சிறப்பம்சமாகும். நிலக்கீழ் ஆராய்ச்சிகளுக்கு குறித்த தடாகம் மிகவும் பயன்மிக்கதாக அமைந்துள்ளதாக ஆராய்ச்சியாளர்கள் தெரிவித்துள்ளனர்.





Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



# யார் இந்த பி

**உயிரினங்கள் நிறைந்த அழகிய இடமாக உலகம் இருக்கின்ற போதிலும் விசித்திரமான, மர்மமான விடயங்கள் பலவும் இந்த உலகில் உள்ளன. இந்த விடயங்கள் பற்றி அறிந்து கொள்ள யாருக்குத்தான் ஆர்வம் இல்லை. எனினும், உலகில் உள்ள சிற்சில மர்மமான விடயங்களைப் பற்றிய விளக்கங்களை வழங்க விஞ்ஞானத்தினாலும் இதுவரை முடியவில்லை. அவை விஞ்ஞானக் கோட்பாடுகளுக்கு அப்பாற்பட்ட விடயங்களாக இன்றும் இருந்து கொண்டிருக்கின்றன.**


உலகில் நடைபெறும் சில சம்பவங்கள் பல வருடங்கள் கழிந்தாலும் மக்களால் இலகுவில் மறக்கப்பட முடியாதனவாக இருக்கும். அவை குறிப்பிட்ட காலத்திற்கு மாத்திரமன்றி எக்காலத்திற்கும் பரபரப்பாகவே பேசப்பட்டுக் கொண்டிருக்கும். அவ்வாறான சம்பவங்களுடன் சில இராட்சத உயிரினங்களும் தொடர்புபட்டிருக்கும். எனினும், இவ்வனைத்து விலங்குகளிலும் ஒரு சில விலங்குகள் குறித்து அபூர்வமான தகவல்கள் அடிக்கடி வெளியாகின்றன. உதாரணமாக டைனோசரஸ், இமாலய பனி மனிதன் யெட்டி, இராட்சதக் கழுகுகள் என அந்தப் பட்டியல் விரிந்து செல்கின்றது. இந்தப் பட்டியலில் இடம்பிடித்திருக்கும் மற்றொரு தகவலையே நாம் உங்களுக்குத் தருகின்றோம்.



கண்டுபிடிக்கப்பட்ட பாதச்சுவடு

அதன் பெயர் பிக் ஃபுட் (Big Foot). தமிழில் 'பெரிய பாதங்கள்' என்று அர்த்தப்படுத்தலாம். கனடாவின் பிரிட்டிஷ் கொலம்பியா மாநிலத்தில் ஐக்கிய அமெரிக்காவின் வடமேல் பசுபிக் பகுதிகளிலுள்ள அடர்ந்த காடுகளில் இந்த உயிரினம் வாழ்வதாக நம்பப்படுகின்றது. கனடாவில் இதனை 'செஸ்கோச்' என்று அழைக்கின்றனர். வடக்கு விஸ்கொன்சியின் லெக்கோட்டா இந்தியர்கள் இந்த உயிரினத்தை 'ச்சியேட்டன்கா' (இராட்சத பெரிய அண்ணன்) என்று அழைத்தனர். நேபாளம் மற்றும் திபெத்தில் 'யெட்டி' என்றும் அவுஸ்திரேலியாவில் 'யோவீ' என்றும் இந்த உயிரினம் அழைக்கப்படுகின்றது.

இந்த மர்ம உயிரினத்தை வைத்து 'பிக் ஃபுட்', 'பிக் ஃபுட் என்ட் த வைல்ட் போய்' என்ற பெயர்களில் தொலைக்காட்சி நாடகத் தொடர்களும் உலகம் முழுவதும் ஒளிபரப்புச் செய்யப்பட்டன. இலங்கையிலும் இத்தொடர் ஒளிபரப்பானது. இத்தொடர்களில் சிறுவர்கள் மீது அன்பு செலுத்துகின்ற, எதிர்பாராத வேளைகளில் நிகழும் ஆபத்துக்களில் இருந்து சிறுவர்களைக் காப்பாற்றுகின்ற கருணை உள்ளம் கொண்ட உயிரினமாக இந்த பிக் ஃபுட் சித்தரிக்கப்பட்டிருந்தது.



Bigfoot H

Sunday, April 29, 2007

Bigfoot Sighted!

Bigfoot has been sighted once again. The expert "Bigfoot Hunter" team from bigfoothunter.com has been called in and is hot on Bigfoot's trail.

On Tuesday, the hairy beast was sighted in a remote corner of a local IHOP, gleefully eating a plate of pancakes. Alarmed patrons ran in terror at the sight of the beast, and his apparent lack of table manners.

At the present no injuries, or wasted food have been reported.

Further information will be released as it develops.

Y 8 HRS OF
TH BIGFO
70
of sa
fury
tryin
to tea
me apa
16 DEAD MAN FOU

## ஜேன் குடோல் கூறும் கருத்து

"பிக் ஃபுட் என்பது உண்மையில் வாழும் ஒரு உயிரினம்" என உறுதியாகக் கூறுகிறார் ஜேன் குடோல். இவர் வானரங்கள் பற்றிய ஆய்வுகளை மேற்கொண்டு வரும் பிரபலமான பெண் விஞ்ஞானியாவார். பிக் ஃபுட் என்பது வானரக் குடும்பத்தினைச் சேர்ந்தது. இது 'பெரிய பாதங்கள்' என்ற அர்த்தத்தினை வழங்குகின்றது. இந்த உயிரினம் சாதாரணமாக ஏனைய வானரங்களை விட மிகப் பெரிய தோற்றத்தினைக் கொண்ட, உடல் முழுவதும் ரோமங்களினால் மூடப்பட்ட, இரண்டு கால்களினால் நடந்து செல்லக்கூடிய இயல்பினைக் கொண்டது என்று கூறப்படுகின்றது. தொலைக்காட்சி நிகழ்ச்சிகளிலும் சில சஞ்சிகைகளிலும் வழங்கப்பட்ட அளவுக்கு மீறிய கற்பனைகளே பிக் ஃபுட் தொடர்பில் விஞ்ஞானிகளுக்கு சந்தேகம் எழும்பக் காரணமாக அமைந்ததாக அவர் மேலும் தெரிவிக்கின்றார்.

## பிக் ஃபுட் குறித்த தேடல்

விஞ்ஞானி ஜேன் குடோல் பிக் ஃபுட் குறித்து அதிக ஆய்வுகள் மேற்கொள்ளப்பட வேண்டும் என்று குறிப்பிடுகின்றார். அவரின் கருத்தினை ஏற்றுக்கொள்ளும் இருவர் உள்ளனர். அதில் ஒருவர் ஜோர்ஜ் ஷாலர். இவர் அமெரிக்க வனஜீவிகள் காப்பகத்தின் சமூக விஞ்ஞானப் பிரிவின் பணிப்பாளர். மற்றையவர் உலக வானரங்கள் காப்பக இயக்கத்தைச் சேர்ந்த ரசல் மிட்டேமியர். இவர் கடந்த 10 ஆண்டுகளில் 10 புதிய வானர இனங்களைக் கண்டுபிடித்துள்ளார். இவர்களைத் தவிர, பிக் ஃபுட் குறித்து ஆய்வுகளை மேற்கொள்ள விரும்பும் விஞ்ஞானிகள் பலரும் உள்ளனர்.



பிக் ஃபுட் பற்றி நடந்த கருத்தரங்கு

## ஆர்வம் ஏற்படக்

உலகில் இருந்து முற்றாக அழிந்துவிட்ட அ
டுமே உரியதாக நம்பப்பட்டு வந்த சில உயிரி
டிருக்கின்றமை தற்போது உறுதிப்படுத்தப்பட்
பற்றி விஞ்ஞானிகள் ஆர்வம் காட்டத் தெ
கள், மலைப்பகுதிக் கெ
கள், உ

வசிப்பது இல்லை. இரு கால்களில் குறுந்தூரம் மட்டுமே அங்கு உள்ளன.

அமெரிக்காவின் மேற்குப் பகுதியில் புதை டிருந்த ஆய்வாளர்களுக்கு செவ் தியர்கள் கள் மற்றும் உருவங்கள் கிடைத்துள்ளன. அவற்றில் செவ்விந்தியர்கள் தாம் சந்தித்த பல் வேறு வகையான உயிரினங்களைச் செதுக்கியிருந்தனர். இவற்றில் ஓர் உருவம் விஞ்ஞானிகளின் சிந்தையை வெகுவாகக் கவர்ந்தது. அதுதான் இரு கால்களில் நிற்கும் ராட்சத வானர உருவம்.

வானர இனங்கள் எதுவுமே வாழாத வட அமெரிக்காவின் செவ்விந்தியப் பழங்குடி மக்கள் வானரத்தின் உருவத்தினைக் கற்களில் செதுக்கியிருந்தமையானது புதைபொருள் ஆய்வாளர்களின் கவனத்தை ஈர்த்தது. பல இடங்களில் தொடர்புகள் இன்றி சிதறி வாழ்ந்த இந்த மக்கள், ஒரே விதமான வானர உருவத்தினை செதுக்கியிருந்தமை அவர்களை ஆச்சரியப்பட வைத்தது. இது உண்மையில் பிக் ஃபுட் உயிரினம் இருந்துள்ளமைக்கான உறுதியான சாட்சியாகும். இது வெறும் கற்பனை வடிவமாக இருக்க முடியாது. அவர்கள் தாம் கண்ட உயிரினத்தையே கற்களில் செதுக்கியுள்ளனர்.

அத்துடன், ஒருவருக்கொருவர் தொடர்புகள் ஏதும் அற்ற நிலையில் பல்வேறு பகுதிகளில் வாழ்ந்து வந்த செவ்விந்திய பழங்குடி மக்களுக்கு ஒரே வகையான உயிரினம் எப்படி கற்பனையில் தோன்றியிருக்க முடியும்? என்ற கேள்வியும் இதன்போது எழுப்பப்பட்டது.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# பிக் ஃபுட்? (Big Foot?)

## ...ற்படக் காரணம்

...துவிட்ட அல்லது புனைகதைகளுக்கு மட்
... சில உயிரினங்கள் இன்றும் வாழ்ந்து கொண்
...படுத்தப்பட்டுள்ள நிலையிலேயே பிக் ஃபுட்
... காட்டத் தொடங்கினர். ராட்சதக் கணவாய்
...பகுதிக் கொரில்லாக்கள், ராட்சதப் பெண்டாக்
கள், உயிருக்கு ஆபத்து விளைவிக்கும்
மீனினங்கள் என்பன
இன்றளவில்
கண்டுபிடிக்கப்
பட்டுள்ள உயி
ரினங்களாகும்.




## செவ்விந்திய மொழி, சித்திரங்களில் இருந்து கிடைத்த ஆதாரங்கள்

பண்டைய காலத்தில் இருந்தே அமெரிக்காவில் வாழ்ந்து வரும் செவ்விந்தியர்களின் மொழி வழக்கில் 'ராட்சத வானரம்' என்ற சொல் பயன்படுத்தப்படுகின்றது. எனினும், வட அமெரிக்க காடுகளில் வானரங்கள்
... குறுந்தூரம் நடந்து செல்லும் கரடிகள்
...

...யில் புதைபொருள் ஆய்வுகளை மேற்கொண்
...ந்தியர்கள் க... ...ரில் செதுக்கியிருந்த சித்திரங்
...ளன.
...சந்தித்த பல்
... செதுக்கி
... விஞ்ஞானி
...ரிந்தது.
...ராட்சத
...
...ழாத வட
...ழங்குடி மக்
...ற்களில்
... பாருள்
...தது. பல
...தறி
...ன வானர
... அவர்களை
...ாமையில்
...மக்கான
...றும் கற்
... அவர்கள்
...ளில்
...
...தொடர்புகள்
...குதிகளில்
...குடி மக்
...ம் எப்படி
...யும்?

## பாதச்சுவடுகள்

பிக் ஃபுட் உயிரினத்தினைக் கண்களால் கண்ட சாட்சிகள் பற்றிய வரலாறு 1820 வரை நீள்கின்றது. பிக் ஃபுட் உயிரினத்தைக் கண்டதற்கான அறிக்கைகள் 2,500 வரையில் கிடைத்துள்ளன. அதேபோன்று அண்மைக்காலத்தில் மிகவும் ஏற்றுக்கொள்ளத்தக்க நீதிமன்ற சாட்சிகளும் இருக்கின்றன. இதில் மிகவும் உறுதியான சாட்சியாக அந்த உயிரினத்தின் பாதச்சுவடினைக் குறிப்பிடலாம். இந்த பாதச்சுவடு 2000 ஆம் ஆண்டில் சென்.ஹெலன்ஸ் சதுப்பு நிலத்தில் புதைந்திருந்து கண்டுபிடிக்கப்பட்டது. பிக் ஃபுட் உயிரினத்தினைக் கண்டுபிடிக்கும் ஆவலில் அது குறித்து முன் அனுபவம் இல்லாத ஒருவர், சதுப்பு நிலப்பகுதியில் பழவகைகளைக் கொட்டியுள்ளார். அந்தப் பழங்களை உட்கொள்ள அங்கு வந்த பிக் ஃபுட் உயிரினத்தின் பாத அடையாளமாகவே அது குறிப்பிடப்படுகின்றது. எனினும், இதனை ஒரு சில விஞ்ஞானிகள் ஏற்றுக்கொள்ள மறுக்கின்றனர்.

## பிக் ஃபுட் என்பது வெறும் கற்பனையா?

பிக் ஃபுட் உயிரினத்தினைக் கண்டுபிடிப்பதற்கான ஆவலுடன் சில விஞ்ஞானிகள் இருக்கும் அதேவேளை, இன்னும் சிலர் அது வெறும் கற்பனை என்று உறுதிப்படுத்துவதில் அதிக ஆர்வம் காட்டி வருகின்றனர். வட அமெரிக்காவில் வாழ்ந்து வந்த பனி யுகத்திற்குரிய 'வூலி மெம்மத்' விலங்குகளினதும் 65 மில்லியன் வருடங்களுக்கு முன்னர் வாழ்ந்ததாக நம்பப்படும் டைனோசர்களின் எச்சங்களும் கண்டுபிடிக்கப்பட்ட நிலையில் பிக் ஃபுட் உயிரினத்தினதோ அல்லது அதற்கு ஒப்பான வேறு எந்தவொரு உயிரினத்தினதோ புதைபொருள் எச்சங்கள் மற்றும் புதைபொருள் சான்றுகள் இதுவரை கிடைக்கவில்லை என்று அந்த விஞ்ஞானிகள் தெரிவிக்கின்றனர்.

## பிக் ஃபுட் பொய் வெளிப்பட்டது

துரதிர்ஷ்டவசமாக பிக் ஃபுட் தொடர்பில் அண்மைக்காலங்களில் முன்வைக்கப்பட்ட சாட்சிகளில் பெரும்பாலானவை பொய்யானவையாகும். 1958 இல் ராட்சத வானரத்தின் பாதங்களின் அடையாளம் என்று ரே வொலன்ஸ் முன்வைத்த ஆதாரமானது அவரால் வேடிக்கைக்காக மேற்கொள்ளப்பட்ட பொய் என்று தனது மரண வாக்குமூலத்தில் ரே வொலன்ஸ் குறிப்பிட்டுள்ளதாக அவரது பிள்ளைகள் தெரிவித்திருந்தனர்.


1958 இல் ரே வொலன்ஸினால் முன்வைக்கப்பட்ட சாட்சியினை அடிப்படையாகக் கொண்டு பிக் ஃபுட் பற்றிய செய்தி, பத்திரிகைகளில் தலைப்புச் செய்தியாக வெளியிடப்பட்டிருந்தன. பிக் ஃபுட்டை பின்னால் துரத்திச் சென்று படம் பிடித்த வீடியோ காட்சிகளை வொலன்ஸ் வெளியிட்டிருந்தார். அது உலகம் முழுவதும் பிரபலமானது. இந்தக் காட்சிகள் பிரபலமான சாட்சியாக ஒரு காலத்தில் கருதப்பட்டது. 2004 ஆம் ஆண்டு 'பெப்சி' நிறுவனத்தில் போத்தல் உற்பத்தியாளராகப் பணியாற்றி, ஓய்வு பெற்ற பொபி ஹிரோனிமஸின் கருத்துப்படி; பிரபல பிக் ஃபுட் பற்றிய வீடியோக் காட்சியில் பிக் ஃபுட்டாக கொரில்லாவின் உடை அணிந்திருந்தது தாம் என்று குறிப்பிட்டிருந்தார்.

## ஷாலரின் தீர்மானம்

இது பற்றிய வாத விவாதங்கள் இருந்தாலும் கூட பிக் ஃபுட் என்ற ஓர் உயிரினம் இருப்பதாக அமெரிக்க வனஜீவிகள் காப்பகத்தின் சமூக விஞ்ஞானப் பிரிவின் பணிப்பாளர் ஜோர்ஜ் ஷாலர் நம்பிக்கை தெரிவிக்கின்றார். அவர் மேலும் கருத்துத் தெரிவிக்கையில், "கடந்த வருடம் முழுவதும் பிக் ஃபுட் உயிரினத்தைப் பார்த்ததாகக் கூறப்படும் பல சாட்சிகளில் 95 சதவீதமானவை பொய் என்பதோடு, எஞ்சிய சாட்சிகளை பொய்யானவை என்று கூறிப் புறக்கணித்து விட முடியாதளவுக்கு ஆதாரங்கள் உள்ளன. ஆகவே, இவ்வாறான விடயங்கள் பற்றி அதிக அவதானத்துடன் இருக்க வேண்டும்" என குறிப்பிடுகிறார். எவ்வாறாயினும் இந்த பிக் ஃபுட் எவ்வளவு பிரபல்யம் பெற்றுள்ளது என்பதற்கு சிறந்த அடையாளமாக 2010 ஆம் ஆண்டு கனடாவின் வன்கூவரில் நடைபெறவுள்ள குளிர்கால ஒலிம்பிக் போட்டியின் சின்னமாக இந்த பிக் ஃபுட் உருவமே தெரிவு செய்யப்பட்டுள்ளமை குறிப்பிடத்தக்கது. இதனை 'கொச்சீ' என்று அழைக்கின்றனர்.

-பிரியதர்ஷினி


ரே வொலன்சின் வீடியோ நாடாக் காட்சி



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## பொது அறிவு

* அன்னை திரேஸாவின் பணிகளை தற்போது தொடர்பவர்
  -அருட்சகோதரி நிர்மலா
* கறுப்பு ரோஜா என அழைக்கப்படுபவர்
  -நெல்சன் மண்டேலா
* புன்னகை நாடு என வர்ணிக்கப்படும் நாடு
  -தாய்லாந்து
* வெள்ளை யானை என அழைக்கப்படும் நாடு
  -தாய்லாந்து
* பொற்கோபுரம் என அழைக்கப்படும் நாடு
  -மியன்மார்
* இந்தியாவின் முதல் பெண் ஜனாதிபதி
  -பிரதீபா பட்டீல்
* கேக் வகைகளின் நாடு என அழைக்கப்படும் நாடு
  -ஸ்கொட்லாந்து
* ஆறுகள் இல்லாத நாடு
  -சவுதி அரேபியா

தொகுப்பு: எஸ்.எம்.நிப்ராஸ், மிஸ்பாஹில் உலூம் அ.கல்., புத்தளம்.

# இரும்புக் கவசம்





வீரன் ஒருவன் மன்னர் அக்பருக்கு இரும்புக் கவசம் ஒன்றை அன்பளிப்பாகக் கொடுத்திருந்தான். யுத்தத்தின்போது பாதுகாப்பிற்காக இரும்புக் கவசத்தை அணிந்து கொள்வதற்கு தகுந்த முறையில் அந்த வீரன் அதனை உருவாக்கியிருந்தான். கவசத்தைப் பார்த்து பரவசமடைந்த மன்னர் அரண்மனையில் உள்ள சிலைக்கு அதனை அணிவிக்கச் சொன்னார். படைவீரர்களை அழைத்து சிலையை வாள்களால் தாக்குமாறு உத்தரவிட்டார். வாள்களால் தாக்கிய பின்பு சிலை உடையாமல் உள்ளதா? என்பதை சோதிக்க விரும்பியே அவ்வாறு கூறினார்.

வீரர்கள் சிலை மீது பலம் கொண்ட மட்டும் ஆயுதங்களால் தாக்கினார்கள். சிலை சிதறி மண்ணில் விழுந்தது. வீரர்கள் சிலை உடைந்த விபரத்தை மன்னனிடம் கூறினார்கள். மன்னன் கவசத்தைப் பரிசளித்த வீரனை அழைத்து கோபமாகச் சப்தமிட்டார். ''மூடனே! நீ கொடுத்து விட்டுப் போன கவசத்தை அணிந்து போருக்குச் சென்றால் என் நிலைமை என்னவாகும்?'' என்று ஆவேசத்துடன் கத்தினார். அன்பளிப்புத் தருவார் என்று கனவு கண்ட வீரனுக்கு அக்பரின் கோபமான வார்த்தைகள் வேதனையை ஏற்படுத்தின. மன்னரிடம் மன்னிப்புக் கேட்டுக்கொண்ட வீரன் நல்ல முறையில் உறுதியான கவசத்தை செய்து எடுத்து வருவதாகக் கூறினான்.

அக்பரிடம் இரும்புக் கவசத்தை பரிசு அளித்த வீரனை அழைத்தார் அமைச்சர் பீர்பால். அரசர் கூறியது போல் உறுதியான கவசத்தை உருவாக்கிக் கொண்டு வந்து தருமாறு கூறினார் பீர்பால். சில நாட்கள் சென்றன. மிகவும் பாடுபட்டு இரவு பகலாகக் கண்விழித்து இரும்புக் கவசம் ஒன்றை உருவாக்கினான் அந்த வீரன். இரும்புக் கவசத்தை எடுத்துக் கொண்டு பீர்பாலிடம் வந்தான். அவர் சில யோசனைகளைகூறினார். அக்பரை சென்று பார்த்தான் வீரன்.

''அரசே.. இம்முறை கவசத்தை சிலைக்கு அணிவிக்க வேண்டாம். நானே மாட்டிக் கொள்கிறேன்.வாளைக் கொண்டு என்னைத் தாக்கச் சொல்லுங்கள். ''என் உயிரை விட உங்கள் உயிர் முக்கியம் தயங்க வேண்டாம். அரசே என்னைத் தாக்கச் சொல்லுங்கள்'' என்றான். உடனே அரசன் வீரனைத் தாக்குவதற்கு உத்தரவிட்டார். அரண்மனை வீரர்கள் ஆயுதங்களால் தாக்க ஆரம்பித்தார்கள். இரும்புக் கவசம் அணிந்திருந்த வீரன் அனைத்து சண்டைகளையும் கற்றறிருந்தபடியால் அரண்மனை வீரர்களைத் தாக்கினான்.



உடலில் கவசம் இருந்தபடியால் அடி எதுவும் படவில்லை. இதைக் கண்ட அரசன், அதிர்ச்சி அடைந்தார். உடனே சண்டையை நிறுத்துமாறு கூறினார். ''வீரனே! எதற்காக எமது வீரர்களிடம் சண்டையிட்டாய்?'' என்று கேட்டார்.

''மன்னிக்க வேண்டும் மன்னா! இந்தக் கவசத்தை அணிந்து கொண்டு தாங்கள் போருக்குப் போகும்போது எதிரிகள் உங்களை தாக்கினால் நீங்கள் திரும்பிச் சண்டையிடுவீர்கள் அல்லவா? அப்படித்தான் என்னை ஆயுதங்களால் தாக்கியவனை நான் தடுத்து நிறுத்தி திரும்பத் தாக்குதலை நடத்தினேன்'' என்றான்.

மன்னர் தமது தவறை உணர்ந்தார். இந்த வீரனுக்கு இந்த அளவுக்கு பேசக் கற்றுக் கொடுத்தது யார் என்று கேட்டார். இந்த யோசனையைக் கூறியது அமைச்சர் பீர்பால் என்று வீரன் கூறியதும் முகம் மலர்ந்தார் அக்பர்.

இ.வசந்ராம், தரம் - 8^A,
யா/சாவகச்சேரி இந்துக் கல்.,

## சுத்தத்தின் முக்கியத்துவம்

'சுத்தம் சுகம் தரும்' என்பது சான்றோர் வாக்கு. சுத்தத்தைப் பேணினால் சுகத்தை உணரலாம். நாம் சுத்தமாக இருந்தால் நாடு சுத்தமாக இருக்கும். நாடு சுத்தமாக இருந்தால் நோய்கள் தீரும். 'நோயற்ற வாழ்வே குறைவற்ற செல்வம்' என்பது பெரியோர் கருத்து. ஆகவே, நாம் நோயற்று வாழ வேண்டுமானால் அசுத்தத்தை அகற்ற வேண்டும். உடலை மட்டும் சுத்தமாக அன்றி உடுத்தும் ஆடைகளையும் நாம் சுத்தமாக அணிய வேண்டும்.

ஆடை சுத்தமின்றி இருக்குமானால் எம்மிடம் நெருங்கக் கூட மற்றவர்கள் அச்சப்படுவார்கள். அழுக்கான ஆடைகளின் மூலம் பலவிதமான நோய்கள் தொற்றலாம். எக்காரணம் கொண்டும் அழுக்கான உடைகளை மட்டும் அணிதலாகாது.



'கந்தையானாலும் கசக்கிக் கட்டு' என்பது முன்னோர் வாக்கு. இதன் பொருளை நோக்கினால், கிழிந்த ஆடையானாலும் அதனை துவைத்து சுத்தமாகத்தான் அணிய வேண்டும். ஆடை கிழிந்திருந்தாலும் அதை விட அழுக்கே பிறர் கண்ணுக்குத் தென்படும்.

எனவே, நன்றாக விளையாடி, நன்றாகக் குளித்து, தேய்த்து உலர்ந்த ஆடைகளை அணிந்து மகிழ்வாக இருந்தால் சுகவாழ்வு கிடைக்கும் என்பது உண்மை.

எம்.என்.எம்.திஷான்,
கா/மல்ஹருஸ்ஸுல்ஹியா ம.ம.வித்., காலி.

# ஆறுகள்



உயிரங்கிகளே வாழமுடியாத ஒரு மிகப்பெரிய ஏரி இருக்கிறது. அதன் பெயர் 'சாக்கடல்'. இது இஸ்ரேல் நாட்டுக்கு அருகில் உள்ளது. இந்த ஏரித் தண்ணீரில் உப்பு மற்றும் தாதுக்கள் அதிகமாக இருக்கின்றன. அதனால், இதன் நீர் மிகவும் அடர்த்தியாக உள்ளது. அதன் காரணமாக நீச்சல் தெரியாதவர்கள் கூட இந்த ஏரியில் மூழ்காமல் மிதக்கலாம். மல்லாந்து படுத்துக் கொண்டு புத்தகம் கூட வாசிக்கலாம். ஆச்சரியமாக இருக்கிறது அல்லவா! அதுபோல நல்ல சுத்தமான நீர் உள்ள மிகப்பெரிய ஆழமான ஏரி எங்கே இருக்கின்றது தெரியுமா?

அது ரஷ்யா நாட்டில் உள்ளது. அங்குள்ள 'சைபீரியா' என்னும் குளிர்ச்சியான பகுதியில் உள்ளது. இதன் பெயர் 'பைக்கால்'. இதன் நீளம் 620 கிலோமீற்றர். இந்த ஏரியில் 500 ஆறுகள் வந்து கலக்கின்றன. உலகத்தில் கிடைக்கும் நல்ல நீரில் 22 சதவீதம் பைக்கால் ஏரியில்தான் உள்ளது.

கோடை காலத்தில் இந்த ஏரியில் படகில் செல்வார்கள். குளிர் காலத்தில் மக்கள் கார்களில் பயணம் செய்கின்றனர். அது எப்படி என்று நினைக்கிறீர்களா? நீர் முழுவதும் உறைந்து பனிக்கட்டிப் பாறைகளாக மாறி வீதியைப் போல ஆகிவிடுகிறது. ஆறுகள் நமக்கு நல்ல நீர் கொடுக்கின்றன. ஆதிகாலத்தில் மனிதன் காடுகளில் அலைந்து திரிந்தான். வேட்டையாடி வாழ்ந்தான். அவன் ஓர் இடத்தில் வாழ ஆரம்பித்தது ஆற்றங்கரைகளில்தான்!

எகிப்து நாட்டை 'நைல் நதியின் கொடை' என்று சொல்கிறார்கள். நைல் நதியைப் போல இன்னொரு பெரிய ஆறு உலகத்தில் உண்டு அதன் பெயர் 'அமேசன்'. இந்த ஆறு தென் அமெரிக்காவில் உள்ளது. இதன் கரைகளில் இருண்ட காடுகள் உள்ளன. இங்கு தங்கம் அதிகமாகக் கிடைக்கின்றது. 'அமேசன்' ஆற்றில் ஆயிரக்கணக்கில் சிறு ஆறுகள் வந்து சேருகின்றன.

க.ஹர்சாயினி,
மா/பாக்கியம் தேசிய கல்.,
மாத்தளை

## கண்டுபிடிப்புகள்

| கண்டுபிடிப்பின் பெயர் | கண்டுபிடித்தவர்கள் | நாடு | ஆண்டு |
|---|---|---|---|
| ஆயுர்வேதம் | ஆத்ரேயர் | இந்தியா | 1000 |
| சைக்கிள் | கே.மாக்கிமில்லன் | பிரிட்டன் | 1480 |
| இரத்த ஓட்டம் | வில்லியம் ஹார்வி | பிரிட்டன் | 1628 |
| கல்குலேட்டர் | பாஸ்க்கல் | பிரான்ஸ் | 1642 |
| கடிகாரம் (பெண்டுலம்) | கிருஸ்டியன் ஹைசின்ஸ் | நெதர்லாந்து | 1656 |
| மூக்குக் கண்ணாடி | பெஞ்சமின் பிராங்ளின் | அமெரிக்கா | 1780 |
| தையல் இயந்திரம் | பாத்லேமி திம்மோனியர் | பிரான்ஸ் | 1829 |
| குளிர்சாதனப்பெட்டி | ஜேம்ஸ் ஹரிசன்ஸ் | அமெரிக்கா | 1850 |
| தீப்பெட்டி | லண்ட்ஸ் டாம் | சுவீடன் | 1855 |
| மோட்டார் சைக்கிள் | டைம்லர் | ஜேர்மனி | 1885 |
| கெமரா (சினிமா) | ஃபீரிஸ் கீரீனே | பிரிட்டன் | 1889 |
| டீசல் என்ஜின் | ரூபால்ப் டிசல் | ஜேர்மனி | 1895 |
| ஆகாய விமானம் | வில்பர்ட் ரைட், ஒவில் ரைட் | அமெரிக்கா | 1903 |
| தொலைக்காட்சி | ஜோன்லூகி பாயாட் | பிரிட்டன் | 1926 |

தொகுப்பு: செ.நிஷாந்தினி, தரம் - 11^A, நு/சரஸ்வதி த.ம.வித்.,

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



**கைவண்ணங்கள்**
**த.பெ.எண் 2037**
**கொழும்பு**



சித்தி ஸாகிரா,
தரம் - 8A,
அல்-ஹம்றா மு.வித்.,
அம்பாறை.



எஸ்.கலைச்செல்வி,
தரம் - 3,
பள்ளத்தன்ன த.வித்.,
கம்மடுவ.




எஃப்.ஸைனப்,
தரம் - 5A,
பதுரியா ம.கல்.,
மாவனல்லை.




ஜே.அர்ச்சனா,
தரம் - 8B,
கோனாவில் வி.ம.வித்.,
கோனாவில்-02



எம்.எம்.எம்.மபாஸ்,
தரம் - 6B,
ஹமீட் அல்-ஹுஸைனியா
கல்.,
கொழும்பு-12.



ச.தனுஷ்கரன், தரம் - 2C,
இந்துக் கல்லூரி,
கொழும்பு-04.



இ.வித்தகன்,
தரம் - 10,
இந்துக் கல்லூரி,
யாழ்ப்பாணம்.



எஃப்.எம்.ஆஸிம், தரம் - 9,
சாஹிரா தே.பாட.,
புத்தளம்.

# விஜய் மாணவர் கழகம்



அங்.இல : 2163

பி.வேதுர்ஷன்,
தரம் - 1A,
ஜயனார்புரம் அ.த.க.பா.,
கிளிநொச்சி.



அங்.இல : 2164

பி.அக்ஷை,
தரம் - 5B,
சென்.ஜோன்ஸ் கல்.,
யாழ்ப்பாணம்.



அங்.இல : 2165

பா.நிஹ்லா,
தரம் - 7C,
அல்-ஹம்ரா ம.வித்.,
தர்கா நகர்.



அங்.இல : 2166

த.சஞ்சீவ், தரம் - 7C,
உவர்மலை விவேகானந்தா
கல்.,
திருகோணமலை.



அங்.இல : 2167

ஸப்னா அம்ஜத்,
தரம் - 4G,
ஹெரோ ச.கல்.,
கொழும்பு.



அங்.இல : 2168

பா.யுவின்சன்,
தரம் - 1,
மத்திய கல்லூரி,
கிளிநொச்சி.



அங்.இல : 2169

மு.ஷுஜாஹ்,
தரம் - 11,
ஸாஹிரா கல்.,
கல்முனை.



அங்.இல : 2170

கு.பவித்ரன்,
தரம் - 6H,
செங்கலடி ம.கல்.,
செங்கலடி.



அங்.இல : 2171

ம.சோபிதா,
தரம் - 8,
யா/யூனியன் கல்.,
சுன்னாகம்.



அங்.இல : 2172

க.கலீபன்,
தரம் - 10C,
வீரசிங்கம் ம.வித்.,
மீசாலை.



அங்.இல : 2173

எம்.என்.எம்.நுஸ்கி,
தரம் - 6C,
சாஹிரா தே.பா.,
புத்தளம்.



அங்.இல : 2174

ஏ.எல்.எம்.ஆதில்,
தரம் - 12,
காத்தான்குடி ம.கல்.,
காத்தான்குடி.



**விஜய் 'விழா உலா'**
**த.பெ.எண் 2037**
**கொழும்பு**

**அண்மையில் மாவனல்லை பதுரியா மத்திய கல்லூரியில் சிறுவர் சந்தை நடைபெற்றது. சந்தையில் பொருட்கள் விற்பனையில் ஈடுபட்ட மாணவர்கள் சிலரையும் அதில் கலந்துகொண்ட பெற்றோர்களையும் படங்களில் காணலாம்.**



✱ ஒவ்வொரு ஆண்டிலும் டிசம்பர் 26 ஆம் திகதி Boxing Day கொண்டாடப்படுகிறது. இந்த நாளில் Boxing வீரர்களிடமிருந்து திரட்டப்பட்ட நிதியிலிருந்து ஏழைகளுக்கு உணவுப் பொதிகள் வழங்கப்படுகின்றனவாம்.

## ஷ்... உங்களுக்கு மட்டும்!



✱ செங்கற்களை உலகுக்கு அறிமுகப்படுத்தியவர்களும் அதற்கு வடிவம் ஒன்றைக் கொடுத்தவர்களும் பெபிலோனியர்களே.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org




# ආයුබෝවන்
# ஆயுபோவன்
# வணக்கம்

இன்றைய பாடத்தில் அம்மாவுக்கும் மகளுக்கும் இடையில் நடைபெறும் ஒரு சிறிய உரையாடலைப் பார்ப்போம்.

கலாபூஷணம் கே.என்.டி.பீரிஸ்



දුව: අම්මේ මගේ අත කකියනවා.
அம்மே மகே அத ககியனவா.
மகள்: அம்மா என் கை வலிக்குது.

අම්මා: කොයි අතද දුව?
கொய் அதத துவ?
அம்மா: எந்தக் கை மகள்?

දුව: මගේ වම් අත කකියනවා.
மகே வம் அத ககியனவா.
மகள்: என் இடது கை வலிக்குது.

අම්මා: හුඟක් රිදෙනවද දුව?
ஹுங்கக் ரிதெனவத துவ?
அம்மா: நன்றாக வலிக்குதா மகள்?

දුව: ඔව් අම්මේ හුඟාක් රිදෙනවා.
ஒவ் அம்மே, ஹுங்கக் ரிதெனவா.
மகள்: ஆம் அம்மா, நன்றாக வலிக்குது.

අම්මා: දකුණු අතත් කකියනවාද?
தகுணு அதத் ககியனவத?
அம்மா: வலது கையும் வலிக்குதா?

දුව: නැහැ අම්මේ දකුණු අත කකියන්නේ නැහැ.
நெஹெ அம்மே, தகுணு அத ககியன்னே நெஹெ
மகள்: இல்லை அம்மா. வலது கை வலிக்கவில்லை.

අම්මා: මෙහේ එන්න දුව. මෙහෙම ඉන්න.
மெஹே என்ன துவ. மெஹெம இன்ன.
அம்மா: இங்கே வாங்க மகள். இப்படி இருங்க.

අත දිග අරින්න. අත නවන්න.
அத திக அரின்ன. அத நவன்ன.
கையை நீட்டுங்கள். கையை மடக்குங்கள்.

අත උස්සන්න. අත රිදෙනවාද?
அத உஸ்ஸன்ன. அத ரிதெனவாத?
கையைத் தூக்குங்க. கை வலிக்கிறதா?

දුව: ඔව් අම්මේ හුඟක් රිදෙනවා.
ஒவ் அம்மே ஹுங்கக் ரிதெனவா.
ஆம் அம்மா நன்றாக வலிக்கிறது.

අම්මා: ඉන්න මම තෙල් ගාන්නම්. හවසත් ගාන්න සනීපවෙයි.
இன்ன மம தெல் காண்ணம். ஹவசத் காண்ண. சனீப வெய்.
இருங்க நான் எண்ணெய் பூசுகிறேன். மாலையிலும் பூசுங்க. குணமாகும்.

## பயிற்சி

**பின்வரும் வாக்கியங்களைச் சிங்களத்தில் மொழி பெயர்க்க.**

உதா: அம்மா என் கை வலிக்குது.
අම්මේ මගේ අත කකියනවා.

i. எனது இடது கை வலிக்குது.
..........................................
ii. கை நன்றாக வலிக்குது.
..........................................
iii. கையைத் தூக்குங்க.
..........................................
iv. நான் எண்ணெய் பூசுகிறேன்.
..........................................






'**Shall**' எனும் எதிரிடை துணைவினைச் சொல் (Modal Auxiliary Verb) மூலவினைச் சொல் (Stem Verb) சகிதம் வாக்கியங்களில் கையாளப்படும் முறை.

(அ) Shall I start?
நான் ஆரம்பிக்கவா?

(ஆ) Shall I start my work?
நான் எனது வேலையை ஆரம்பிக்கவா?

(இ) Shall I start my work tomorrow?
நான் எனது வேலையை நாளை ஆரம்பிக்கவா?

---

(அ) Shall we start our work?
நாங்கள் எங்கள் வேலையை ஆரம்பிப்போமா?
(எங்களுக்குள் நாங்கள் அபிப்பிராயம் கோருதல்)

(ஆ) Shall we start our work on Friday?
நாங்கள் எங்கள் வேலையை வெள்ளிக்கிழமை ஆரம்பிப்போமா?

---

(அ) Shall I wrap?
நான் சுற்றிக்கட்டவா?

(ஆ) Shall I wrap this parcel?
நான் இந்தப் பொதியை சுற்றிக்கட்டவா?

(அ) Shall I borrow?
நான் இரவல் வாங்கவா?

(ஆ) Shall I borrow some money?
நான் கொஞ்சம் பணம் இரவல் வாங்கவா?

---

(அ) Shall I wipe?
நான் துடைக்கவா?

(ஆ) Shall I wipe this table?
நான் இந்த மேசையைத் துடைக்கவா?

(இ) Shall I wipe my hands?
நான் எனது கைகளைத் துடைக்கவா?

---

(அ) Shall I make?
நான் தயாரிக்கவா?

(ஆ) Shall we make?
நாங்கள் தயாரிப்போமா?
(எங்களுக்குள் அபிப்பிராயம் கோருதல்)

(அ) Shall I make some tea?
நான் கொஞ்சம் தேநீர் தயாரிக்கவா?

(ஆ) Shall we make some tea?
நாங்கள் கொஞ்சம் தேநீர் தயாரிப்போமா?
(எங்களுக்குள் அபிப்பிராயம் கோருதல்)

---

(அ) Shall I make the arrangements?
நான் ஏற்பாடுகளை மேற்கொள்ளவா?

(ஆ) Shall we make the arrangements?
நாங்கள் ஏற்பாடுகளை மேற்கொள்வோமா?
(எங்களுக்குள் அபிப்பிராயம் கோருதல்)

(அ) Shall I do this work?
நான் இந்த வேலையைச் செய்யவா?

(தொடரும்)


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org




அற்லஸ் வழியே உலகைக் காண்போம்...

இங்கு வழங்கப்பட்டுள்ள உலக நடப்புக்கள் தொடர்பான தகவல்களிலிருந்து கேட்கப்படும் கேள்விக்கு சரியான விடை அளிப்போரில் மூவருக்குத் தலா ரூ.150/= பெறுமதியான 'அற்லஸ்' பாடசாலை உபகரணங்களை வாங்கக் கூடிய பண வவுச்சர்களைப் பரிசாக சிலோன் பென்சில் நிறுவனம் (அற்லஸ்) வழங்கும்.


# ஈரானுக்கு எதிராக புதிய தீர்மானம்




யுரேனியம் செறிவூட்டல் முன்னெடுப்புக்களை நிறுத்துமாறு ஈரானிடம் கோரிக்கை விடும் தீர்மானமொன்று ஐக்கிய நாடுகள் சபையில் நிறைவேற்றப்பட்டுள்ள அதேவேளை, ஈரான் மீது புது வித தடைகள் எதனையும் விதிப்பதற்கு ஐ.நா.சபை முயற்சிகளை மேற்கொள்ளவில்லை என்றும் கூறப்படுகின்றது.

ஈரான் மீதான இந்த தீர்மானத்திற்கு பிரிட்டன், சீனா, பிரான்ஸ், ரஷ்யா, அமெரிக்கா, ஜேர்மனி ஆகிய நாடுகள் தமது இணக்கத்தைத் தெரிவித்துள்ளன. இருப்பினும் இந்த தீர்மானத்தை ஏற்றுக்கொள்ள மறுத்துள்ள ஈரான் யுரேனியம் செறிவூட்டலை தொடர்ந்து முன்னெடுக்கவுள்ளதாக அறிவித்துள்ளது.

மேலும், நடைபெற்று முடிந்துள்ள ஐ.நா சபையின் மாநாட்டில் ஈரான் ஜனாதிபதி அஹமத் நிஜாத் உரையாற்றும்போது, சகல எதிர்ப்புக்களையும் மீறி அணு திட்டத்தை தாம் முன்னெடுக்கப் போவதாக குறிப்பிட்டிருந்தமையும் குறிப்பிடத்தக்கது. அணு சக்தி விடயத்தில் உலக நாடுகள் அனைத்தும் ஈரானுக்கு எதிராக இருப்பதை ஐ.நா வில் ஏற்படுத்திய தீர்மானம் உணர்த்தி நிற்பதாக ஐ.நா உறுப்பு நாடுகள் பல தெரிவித்துள்ளன.



## தாய்வானிலும் சூறாவளி...!

தாய்வானில் வீசிய 'ஜென்க்மி' சூறாவளியினால் ஏற்பட்ட கடும் மழை, வெள்ளத்தினால் ஐம்பதிற்கும் மேற்பட்டோர் காயங்களுக்கு உள்ளாகியுள்ளனர்.

மேற்படி, சூறாவளியின் காரணமாக பாடசாலைகள், வர்த்தக நிலையங்கள், காரியாலயங்கள் அனைத்தும் மூடப்பட்டதுடன், போக்குவரத்திலும் ஸ்தம்பித



நிலை ஏற்பட்டது. கடும் காற்றின் காரணமாக மின்கம்பங்களும் மரங்களும் சரிந்து விழுந்தமையாலும் அநேகமானோர் காயங்களுக்கு உள்ளாகியுள்ளனர்.

மணிக்கு 191 கி.மீற்றர் வேகத்தில் வீசிய இந்த 'ஜென்க்மி' சூறாவளியினால் வெளிநாட்டு உல்லாசப் பிரயாணிகள் சிலரும் அனர்த்தங்களுக்கு உள்ளாகியதாகவும் செய்திகள் தெரிவிக்கின்றன.

அத்தோடு, கடற்கரையோரங்களை வசிப்பிடமாகக் கொண்ட மூவாயிரம் பேர் வரையில் அப்பகுதிகளிலிருந்து வெளியேற்றப்பட்டதுடன், விமான சேவைகளும் நிறுத்தப்பட்டிருந்தமையும் குறிப்பிடத்தக்கது. 'கொரிய' மொழியில் 'ஜென்க்மி' என்றால் 'ரோசாப் பூ' என்று அர்த்தமாகும். இந்தப் பெயரையே மேற்படி சூறாவளிக்கு வழங்கப்பட்டுள்ளது.

## மோசமான நாடுகளின் பட்டியலில் சோமாலியா



உலகில் மோசமான நாடுகளின் பட்டியலில் சோமாலியா முதலாவது இடத்தைப் பெற்றுள்ளது. ஜேர்மனி நாட்டின் பேர்லின் நகரில் இயங்குகின்ற 'டிரான்ஸ்பேரன் இன்டர்நெஷனல்' அமைப்பின் வருடாந்த அறிக்கையில் இந்த விபரம் வெளியிடப்பட்டுள்ளது.

இந்த பட்டியலின்படி மிகவும் நல்ல நிலையில் உள்ள நாட்டிற்கு 10 புள்ளிகள் வழங்கப்பட்டது. அதற்கு அடுத்தபடியாக மோசடி, துஷ்பிரயோகங்கள் நடக்கின்ற நாடுகளுக்கான புள்ளிகள் மோசடித்தன்மைக்கேற்ப படிப்படியாக குறைக்கப்படும். அதற்கேற்ப பூஜ்ஜியம் புள்ளிகளைப் பெறும் நாடே உலகில் மோசமான நாடாகக் கருதப்படும்.

இதன்படி, 9.3 புள்ளிகளைப் பெற்ற டென்மார்க், சுவீடன், நியூஸிலாந்து ஆகிய நாடுகள் துஷ்பிரயோகங்கள் குறைந்த நாடுகளாக இனங்காணப்பட்டுள்ளன. 9.2 புள்ளிகளைப் பெற்றுள்ள சிங்கப்பூர் நல்ல நிலையில் உள்ள நாடுகளின் பட்டியலில் இரண்டாவது நாடாக அடையாளமிடப்பட்டுள்ளது. அவ்வாறே பிரிட்டன் 7.3 புள்ளிகளைப் பெற்று 16 ஆவது இடத்தையும் 7.3 புள்ளிகளைப் பெற்று அமெரிக்கா 18 ஆவது இடத்தையும் பெற்றுள்ளன. மோசமான நாடாக இனங் காணப்பட்டுள்ள சோமாலியா 1 புள்ளி பெற்றுள்ளமை குறிப்பிடத்தக்கது.

தெற்காசிய நாடுகளில் இந்தியா 85 ஆவது இடத்தையும், இலங்கை 92 ஆவது இடத்தையும், மாலைதீவு 115 ஆவது இடத்தையும், நேபாளம் 121 ஆவது இடத்தையும், பாகிஸ்தான் 134 ஆவது இடத்தையும், ஆப்கானிஸ்தான் 176 ஆவது இடத்தையும் பெற்றுள்ளமை குறிப்பிடத்தக்கது.

## ஆப்கான் ஜனாதிபதியின் சமாதான அழைப்பு



சமாதான பேச்சுக்களுக்கு முன்வருமாறு 'தலிபான்' அமைப்பிடம் ஆப்கான் ஜனாதிபதி ஹமீஸ் கர்ஸாயி அழைப்பு விடுத்துள்ளார். இந்த பேச்சு வார்த்தைகளுக்கு உரிய ஒத்தாசைகளை வழங்குமாறு அண்டை நாடான சவுதி அரேபியாவிடம் அவர் கேட்டுக் கொண்டுள்ளார்.

2001 ஆம் ஆண்டில் அமெரிக்க இராணுவத்தினால் தலிபான் அரசின் ஆட்சி கவிழ்க்கப்பட்டதிலிருந்து 'தலிபான்' அமைப்பின் தலைவர் தலைமறைவாகவே இருந்து வருகின்றார்.

அண்மையில் 'தலிபான்' தலைவர் முல்லா ஓமாருடன் தான் உரையாடியதாகவும் ஆப்கான் ஜனாதிபதி தெரிவித்துள்ளார். சுமுகமான பேச்சு வார்த்தைகளுக்கு முன்வருமாறு தலிபான் தலைவரிடம் அப்போது கோரிக்கை விடுத்ததாகவும் அவர் குறிப்பிட்டுள்ளார்.

ஆப்கானில் போரிட்டு வருகின்ற சர்வதேச இராணுவத்தினருடன் இணக்கப்பாட்டிற்கு வருவதற்கு தலிபான் தலைவர் விரும்பினால் அதற்கான ஏற்பாடுகளை செய்வதற்குத் தாம் ஆயத்தமாக இருப்பதாகவும் ஆப்கான் ஜனாதிபதி மேலும் தெரிவித்துள்ளார்.

தலிபான் அமைப்புடன் சவுதி அரேபியாவில் ரகசிய சமாதானப் பேச்சு வார்த்தைகள் நடைபெற்றதாக கூறப்படுவதை ஜனாதிபதி முழுமையாக மறுத்துள்ளமையும் குறிப்பிடத்தக்கது.

## அற்லஸ் கேள்வி - 172

**கேள்வி:** ஆப்கானிஸ்தானில் தலிபான் ஆட்சி எத்தனையாம் ஆண்டு கவிழ்க்கப்பட்டது?

சரியான விடை.......................................

**உங்கள் விடையுடன்- பெயர், முகவரி, வகுப்பு, பாடசாலை முகவரி, வீட்டு முகவரி, அருகிலுள்ள நகரம், மாவட்டம் முதலிய விபரங்களைத் தபாலட்டையில் மாத்திரம் எழுதி அனுப்ப மறவாதீர்கள்.**

**அனுப்ப வேண்டிய முகவரி:**

**அற்லஸ் வழியே**
**உலகைக் காண்போம், கேள்வி - 172,**
**விஜய், த.பெ.எண் 2037, கொழும்பு.**

## போட்டி இல - 170 இன் சரியான விடை: 16 அமைச்சர்கள்

**பரிசு பெறுவோர்**

ஆர்.தினேஸ்தரன்,
26, நீதிமன்ற வீதி, கொழும்பு-12.

ஆர்.விஜயகாந்தன்,
இம்புல்பிட்டி தோட்டம்,
கிறீன்வூட், நாவலப்பிட்டி.

பாத்திமா மின்ஹா,
217/A, தவுலகள, ஹந்தெஸ்ஸ.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# புத்தகப்பை பாரமாக இருக்கின்றதா?

**புத்தகப்பைகள் பிள்ளைகளுக்கு இலகுவான ஒரு வழியாக அமையாமல் அவர்களின் தேக ஆரோக்கியத்தில் பலவீனங்களை ஏற்படுத்தும் சுமைகளாக மாறியுள்ளன**

மாணவர்கள் பாடசாலைகளுக்கு புத்தகங்களை எடுத்துச் செல்ல பலவிதமான புத்தகப் பைகளை உபயோகிக்கின்றனர். தோளில் மாட்டி முதுகில் காவிச் செல்லும் பைகள், சூட்கேஸ் வடிவிலான பெட்டிகள், இழுத்துச் செல்லும் பைகள் என்று அவற்றின் வடிவங்களைக் குறிப்பிடலாம். இன்னும் சிலர் புத்தகங்களை கைகளில் எடுத்துச் செல்கின்றனர். எனினும், இந்தப் புத்தகப்பைகள் பிள்ளைகளுக்கு இலகுவான ஒரு வழியாக அமையாமல் அவர்களின் தேக ஆரோக்கியத்தில் பலவீனங்களை ஏற்படுத்தும் சுமைகளாக மாறியுள்ளன.



அண்மையில் கம்பஹா மாவட்டத்தின் பாடசாலைகளில் (6,7 மற்றும் 8 ஆகிய வகுப்புகளில்) மாணவர்களை இணைத்து பாடசாலைப் புத்தகப்பைகள் குறித்த ஆய்வொன்று மேற்கொள்ளப்பட்டது. அம்மாவட்டத்தைச் சேர்ந்த 55 பாடசாலைகளிலிருந்து சுமார் 1607 மாணவர்கள் இந்த ஆய்வில் இணைத்துக் கொள்ளப்பட்டனர். பாடசாலைப் புத்தகப்பைகளை பிள்ளைகளுக்குத் தொல்லை தரும் விடயமாக இல்லாமல் இலகுவானதாக, அவர்களால் சுமந்து செல்வதற்கு ஏற்றதாக மாற்றுவது எப்படி? என ஆய்வு செய்வதே இதன் நோக்கமாகும்.

பாடசாலைப் புத்தகப் பையின் நிறை பொதுவாக 3.72 கிலோகிராமாக இருக்க வேண்டும். அதன் நிறை உடல் நிறையின் அளவில் 11.04 % ஆக இருக்க வேண்டும். எனினும், 57.9% மான பிள்ளைகள் இந்த அளவை மீறியுள்ளனர். அநேகமானவர்கள் நியமிக்கப்பட்ட அளவை விட அதிக நிறை கொண்ட புத்தகப்பைகளையே பயன்படுத்துகின்றனர் என்பது இந்த ஆய்வின் மூலம் தெரியவந்துள்ளது. பாடசாலை புத்தகப்பையின் முழு நிறையில் 36.56% ஆனவை அச்சுப் புத்தகங்களும் 30.38% வேறு புத்தகங்களும் 17.74% ஆனவை புத்தகம் அல்லாத விடயங்களும் அடங்கியிருக்க வேண்டும்.






## சிறந்த புத்தகப்பை

இரண்டு கைப்பிடிகளையும் தோளில் மாட்டி முதுகில் காவிச் செல்லும் புத்தகப்பை ஆரோக்கியத்திற்கு உகந்தது. பிள்ளைகளில் பெரும்பாலானோர் இந்த வகையிலான புத்தகப்பைகளையே உபயோகப்படுத்துகின்றனர். இவ்வாறான புத்தகப்பைகளை சுமப்பவர்களுக்கு தோள்பட்டையில் வலி, முதுகு வலி என்பன ஏற்பட வாய்ப்புக் குறைவு. ஏனெனில், இரண்டு கைப்பிடிகளும் இரு பக்கத்தோள்களிலும் மாட்டப்படுவதால் புத்தகப்பையின் சுமை சமமாக்கப்படுகின்றது.

அதேவேளை, புத்தகப்பையில் இருக்கவேண்டிய சுமை மீறப்படுமிடத்து, தசைகளிலும் தோள்பட்டைகளிலும் முள்ளந்தண்டிலும் வலி ஏற்படலாம். அத்துடன், சுமை கூடுமிடத்து அதனைச் சமாளிக்க பிள்ளைகள் தங்களை அறியாமல் வளைந்தவாறு நடந்து செல்வார்கள். இதுவே நாளடைவில் அவர்களுக்குப் பழக்கப்பட்டு விடுவதோடு கூன் விழத் தொடங்கி விடவும் வாய்ப்புண்டு. மேலும் தோள்பட்டிகளில் பஞ்சு வைத்துத் தைக்கப்பட்டிருப்பது சிறந்தது. இதனால், தோளில் பட்டிகள் உரசுவது குறைவடையும்.


தவறான முறையில் புத்தகப்பைகளை சுமப்பது உடல்ரீதியான பலவீனங்களை ஏற்படுத்தும்

தனியாக ஒரு பக்கத்தோளில் புத்தகப்பையை சுமக்கும்போது அதன் முழுச் சுமையும் ஒரே பக்கத்துக்கு சார்ந்து விடுவதால் சில மாணவர்கள் ஒரு பக்கத்திற்கு வளைந்தவர்களாக சிரமமாக நடந்து செல்வதை நாம் காண்கிறோம். இவ்வாறான நிலைமைகளின்போது அவர்கள் கைவலி, தோளில் வலி என்பனவற்றால் அவதிப்படக்கூடும்.

எனவே, புத்தகப் பைகளைத் தெரிவு செய்யும்போது மேற்கூறிய விடயங்களைக் கருத்தில் கொள்வது உகந்ததாகும்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# கிளிகள் தந்த அறிவு



இறக்கை முளைத்ததும் பறந்து போன கிளியொன்று, தனது குடும்பத்தாரைப் பார்க்க பல ஆண்டுகள் கழித்து வந்தது. அந்த மரப்பொந்தில் தன் உடன்பிறப்புகளைப் பார்த்து ஆனந்தம் கொண்டது. அவையும் தமது அண்ணனைப் பார்த்த மகிழ்ச்சியில் இன்னும் வளராத தமது இறக்கைகளை அசைத்தன. அப்போது அம்மாக் கிளி வந்தது.

"மகனே....! நீ என் மூத்த செல்லம் இல்ல? எப்படிடா இருக்கே?" என்று அதன் இறக்கைகளைக் கோதியபடி கேட்டது.

"ஆமாம் அம்மா. நானேதான். இறக்கை முளைத்ததும் நான் உன்னை மறந்துபோய்விட்டேன். மன்னித்து விடம்மா" என்று வருந்தியது மகன் கிளி.

"மகனே..., இறக்கை முளைத்தால் பறந்து போய்விடுவது பறவைகள் இனத்து விதி. விதி மட்டும் அல்ல. அது கடமையோடு கூடிய ஏற்பாடும் ஆகும். ஒரே கூட்டில் எல்லோரும் எப்படித் தொடர்ந்து வாழ முடியும்? நமக்குப் போதிய இடவசதி இல்லையே. இடவசதி இருந்தும் மனித இனத்தில் பிள்ளைகள் பெற்றோரைத் துரத்திவிடுகிறார்களே"

"அம்மா... நான் உங்களோடு கூடி வாழ ஆசைப்படுகிறேன். இனி உங்களை விட்டுப் பிரிய மாட்டேன்" என்று கண்ணீர் விட்டது.

"செல்லமே.. உன் பாசத்தைக் கண்டு மகிழ்ச்சி அடைகிறேன். இந்தப் பொந்துக்கு அருகில் இன்னொரு காலிப் பொந்து இருக்கிறது. நீயும் உன் துணையும் வந்து தங்கிக்கொள்ளுங்கள். ஒரே பொந்தில் வாழ வேண்டுமானால், உன் உடன் பிறந்தவர்களை என்ன செய்வது?" என்று கவலையோடு கேட்டது.



"அம்மா... நான் வளர்ந்து இன்னொரு துணையோடு வாழ்கிறேன். பால்மணம் மாறாத என் உடன் பிறந்தோரை வெளியேற்றி சொகுசாக உங்களோடு வாழ, நான் ஒன்றும் மனிதன் இல்லை. நான் உங்களோடு வாழ விரும்புவது, கடைசி காலத்தில் பெற்றோர்களுக்கு உதவியாக இருந்து உதவத்தான். இந்தப் பக்கத்துப் பொந்தில் தங்கி உனக்கும் என் உடன்பிறந்தோருக்கும் உதவுகிறேன்" என்று இன்பத்தில் பறந்து வட்டமிட்டது.

அந்த மரத்தடியில் அமர்ந்து படித்துக் கொண்டிருந்த முருகன் கிளிகளின் உரையாடலை உணர்ந்து கொண்டான். கிளியின் பாசத்தைக் கண்டு அதிசயித்தான். ஆறறிவு படைத்தவர்கள் கடைசி காலத்தில் பெற்றவர்களை ஆதரிக்காமல் தவிக்க விடுவதைத் தன் வீட்டிலேயே பார்ப்பவன் அவன்.

தன் தாத்தா, பாட்டியை முதியோர் இல்லத்தில் இருந்து அழைத்து வரும்படி சண்டை போட வேண்டும். அழைத்து வர மறுத்தால் தானும் அவர்களோடு அங்கே தங்கிவிடுவதாகப் பயமுறுத்தவும் வேண்டும் என்று அவன் முடிவெடுத்தான்.

வீட்டுக்குப் புறப்பட்டான் முருகன். அவன் நடையில், தாத்தா-பாட்டியை அழைத்து வரப்போகும் துள்ளல் இருந்தது.




இரவுக்காட்சி முடிவடைந்திருந்த அந்த நேரத்தில் வீதியில் ஓரளவுக்கு சனநடமாட்டம் இருந்தபடியால் திரையரங்கில் தனியாக இருப்பதற்கு அப்பொழுது விமலுக்கு அவ்வளவு பயம் இருக்கவில்லை. ஆனால், இன்னும் சிறிது நேரத்தில் வீதியும் வெறிச்சோடிய நிலைக்கு வந்துவிடும். இன்று எங்குபோய் இருக்கலாம் என்று யோசித்தவனுக்கு கெபினில் அதாவது படம் ஓட்டும் இடத்தில் போய் இருக்கலாம் என்னும் எண்ணம் ஏற்பட்டது. அதனால், விரைந்து செயல்பட்டான்.

திரையரங்கு முழுவதையும் மற்றும் சுற்றுப்புறத்தையும் போய் சோதனை செய்துவிட்டு வரவேண்டும். அதன்படி செயல்பட்டான். திரையரங்குக்குள் மின்விளக்குகளை அணைக்கு முன்னர் போய் ஒரு சுற்று சுற்றினான். முன் இருக்கைகள் அதாவது கலரியில் சுற்றி வந்தபோது காலில் ஏதோ 'சதக்' கென மிதிபட்டது. என்னவென்று 'டோர்ச்' வெளிச்சத்தை அடித்துப் பார்த்தான். அங்கே.... யாரோ வெற்றிலையை நன்றாக மென்று துப்பி வைத்திருந்தார்கள். அதைப் பார்த்ததும் அவனுக்கு மிகுந்த அருவருப்புடன் எரிச்சலாகவும் இருந்தது.

## படக்காட்சியின் போது அதிர்ச்சி

பாத்ரூமுக்குப் போய் காலை நன்கு கழுவிக் கொண்டான். "ச்சே! இந்த ஊரில் இருப்பவர்கள் என்ன மனிதர்கள். தியேட்டருக்குள்ளேயே கண்டபடி துப்பி வைத்திருக்கிறார்களே. இந்த லட்சணத்தில் ஓட்டைத் தியேட்டர் என்று வேறு சொல்லிக் கொள்கிறார்கள். பாவம் முதலாளி என்னதான் செய்வார் என்று பலவாறு நினைத்துக் கொண்டே மண்டபத்துக்குள் மின்விளக்குகளை அணைத்துவிட்டான்.

பிரதான வாயிலுக்கு வெளியில் போய் முதல்நாள் போன்று அமர்ந்துகொண்டான். நேரம் கடந்து கொண்டிருந்தது. பன்னிரெண்டு, ஒன்று, இரண்டு மணியெல்லாம் அவனுக்கு அவ்வளவு பயமாக இருக்கவில்லை. மூன்று மணியை நினைக்கும் போதுதான் மிக மிகப் பயமாக இருந்தது. ஏனென்றால், அந்த நேரத்தில்தான் பேய் உலாவும் என்று அவன் கேள்விப்பட்டு இருக்கிறான்.

அவன் நினைத்தது போலவே முன்னைய நாள் மூன்று மணிக்கு 'பஞ்சிங்' அடிக்கப் போனபோதுதான் அந்தக் கரிய உருவத்தைக் கண்டான். முதல்நாள் தியேட்டருக்குள் அந்தப் பெண்ணைக் கண்ட நேரமும் கிட்டத்தட்ட அந்த நேரம்தான். அதற்கு அடுத்தநாள் ஆட்கள் பேசிக்கொள்ளும் சத்தம் கேட்டதும் அந்த நேரம் அளவில்தான். இதையெல்லாம் நினைத்துப் பார்த்த அவன் இன்று மூன்று மணிக்கு என்ன நடக்குமோ என்று நினைத்துப் பயந்தான்.

இரண்டு மணி கடக்கும் வரை இப்படியே இங்கு இருந்துவிட்டு அதன் பின்னர் கெபினில் போய் இருந்துவிட வேண்டும் என்று தீர்மானித்துக் கொண்டான். காவல் கடமையை ஏற்று இருப்பதால் திரையரங்குக்குள்ளேயோ அல்லது வெளியிலோ திருட்டுக்கள் எதுவும் நடந்துவிடாமல் பாதுகாக்க வேண்டிய பொறுப்பு தனக்கு இருப்பதை அவன் மறந்துவிடவில்லை. அதனால், பயத்தின் ஊடே சுற்றுமுற்றும் நோட்டமிட்டுக் கொண்டும் இருந்தான்.

நேரம் மூன்று மணியை நெருங்கிக் கொண்டிருந்தது. மெதுவாக 'கெபினை' நோக்கி நடந்தான். பின்னர் அங்கு மின் விளக்குகளைப் போட்டுவிட்டான். திரையரங்குக்குள் மின்விளக்குகள் போடப்படாததால் இருளாக இருந்தது. படம் ஓட்டும் யன்னல்களுக்கூடாக திரையரங்கைப் பார்க்கையில் மிகவும் பயமாக இருந்தது. முதல் நாளன்று பெல்கனியில் அமர்ந்திருந்தபோது தலைவிரிகோலத்துடன் அந்தப் பெண் வந்ததும் அவனுக்கு நினைவு வந்தது. இன்றைய பொழுதை எப்படிக் கடத்துவது என்று சிந்தித்தான். ஏதாவது வேலை செய்து கொண்டு இருந்தால் சிந்தனையெல்லாம் அந்த வேலையோடு ஒன்றிப் போய்விடும்.

என்ன செய்யலாம்? என்று சிந்தித்தவனுக்கு திடீரென ஒரு யோசனை ஏற்பட்டது. படம் ஓட்டிப் பார்த்தால் என்ன? அதற்கு இதைவிட நல்ல சந்தர்ப்பம் எப்போது கிடைக்கும். படம் ஓட்டிப் பார்த்துவிடவேண்டும் என்னும் ஆசையும் நிறைவேறிவிடும். இப்படி நினைத்தவன் விரைந்து செயல்பட்டான். ஒரே கல்லில் இரண்டு மாங்காய்கள். படம் ஓட்டும் ஆசையும் நிறைவேறிவிடும். பேய் பயத்தையும் ஓரளவு தவிர்த்துக் கொள்ளலாம். ஏனென்றால், இதுவரை பேய் கோளாறு எதுவும் காணாத இடமும் "கெபின் மட்டுந்தான்.

**ஏதாவது வேலை செய்துகொண்டு இருந்தால் நேரத்தையும் ஓரளவு கடத்திவிடலாம். பேய் பயத்தையும் ஓரளவு தவிர்த்துக் கொள்ளலாம் என்று நினைத்தவனுக்கு ஒரு யோசனை வந்தது**

'புரொஜெக்டரில்' ரீலைப் போட்டுப் படத்தை ஸ்டார்ட் பண்ணினான். சர்ரென 'புரொஜெக்டர்' இயங்கும் சத்தம். அந்தச் சத்தம் அவனுக்கு மிகவும் பிடிக்கும். திரையில் படம் ஓட ஆரம்பித்தது. இந்தப் படத்தில் அவன் இன்னும் பார்க்காத காட்சி படத்தின் ஆரம்பக் காட்சிதான்.



இப்போது அவனே அதனைப் போட்டுப் பார்த்தான். பேய் பயம் ஓரளவுக்குப் போய் விட்டது. படத்தைப் பார்த்து ரசித்துக் கொண்டிருந்தான். அவனுக்குப் பெருமையாகவும் மகிழ்ச்சியாகவும் இருந்தது.

திரையில் படத்தைப் பார்த்துக் கொண்டு இருந்தவன் தற்செயலாக மண்டபத்தின் முற்பகுதியில் அதாவது கலரியில் பின் ஆசனத்தைப் பார்த்து அதிர்ந்துவிட்டான். அங்கே..... அவன் கண்ட காட்சி...? தலைவிரி கோலத்துடன் பெண் ஒருத்தி அமர்ந்திருந்து படம் பார்த்து ரசித்துக் கொண்டிருந்தாள்.

(தொடரும்.....)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# உலகிலேயே அதிக டெஸ்ட் போட்டிகள் நடைபெற்றுள்ள மைதானம்



லண்டன் நகரில் அமைந்துள்ள 'லோட்ஸ்' மைதானம்

உலகில் அதிக எண்ணிக்கையிலான டெஸ்ட் போட்டிகள் நடைபெற்றுள்ள டெஸ்ட் அரங்கு எது தெரியுமா? இங்கிலாந்தின் லண்டன் நகரில் அமைந்துள்ள 'லோட்ஸ்' மைதானமே அந்த பெருமைக்குரிய அரங்காகும். இந்த மைதானத்தில் இதுவரை 116 டெஸ்ட் போட்டிகள் நடைபெற்றுள்ளன.

அதுமட்டுமன்றி இந்த 'லோட்ஸ்' விளையாட்டரங்கில் 92 சர்வதேச ஒருநாள் போட்டிகள் நடைபெற்றுள்ளமையும் குறிப்பிடத்தக்கது.

'லோட்ஸ்' மைதானத்தில் முதலாவது டெஸ்ட் போட்டி 1884 ஆம் ஆண்டில் நடைபெற்றுள்ளது. இதுவே உலகின் இரண்டாவது டெஸ்ட் போட்டியாகவும் அமைந்தது. இப்போட்டியில் இங்கிலாந்து அணியும் அவுஸ்திரேலிய அணியும் மோதியிருந்தன. இந்த போட்டியில் இங்கிலாந்து அணி இன்னிங்ஸாலும் ஐந்து ஓட்டங்களாலும் வெற்றியீட்டியிருந்தது. இந்த மைதானத்தில் இங்கிலாந்து அணியுடன் அதிகமான போட்டிகளில் கலந்து கொண்டுள்ள அணி அவுஸ்திரேலிய அணிதான், அதன்படி, இந்த மைதானத்தில் இங்கிலாந்துடன் அவுஸ்திரேலியா 34 டெஸ்ட் போட்டிகளில் கலந்து கொண்டுள்ளதுடன் இதே மைதானத்தில் இங்கிலாந்துடன் அவுஸ்திரேலியா, மே.இ.தீவுகள் அணியினர் தலா 15 ஒருநாள் போட்டிகளில் கலந்து கொண்டுள்ளமையும் குறிப்பிடத்தக்கது.



அவுஸ்திரேலியாவின் 'மெல்பேர்ன்' கிரிக்கெட் அரங்கு

இதனையடுத்து சர்வதேச மட்டத்தில் அதிகமான டெஸ்ட் போட்டிகள் நடத்தப்பட்ட மைதானங்களின் பட்டியலில் அவுஸ்திரேலியாவின் 'மெல்பேர்ன்' கிரிக்கெட் அரங்கு முக்கிய இடம் வகிக்கிறது. இந்த அரங்கில் இதுவரை 100 டெஸ்ட் போட்டிகள் நடைபெற்றுள்ளதுடன், 252 ஒருநாள் போட்டிகள் நடைபெற்றுள்ளன. உலகின் முதலாவது டெஸ்ட் போட்டி நடைபெற்றதும் இந்த மைதானத்தில் தான். 1877 ஆம் ஆண்டு நடைபெற்ற இந்த போட்டியில் அவுஸ்திரேலியாவும் இங்கிலாந்தும் மோதியிருந்தன. இதில் அவுஸ்திரேலிய அணி 45 ஓட்டங்களால் வெற்றியீட்டியிருந்தது.

இதற்கு அடுத்தபடியாக உலகில் அதிகமான டெஸ்ட் போட்டிகள் நடைபெற்ற மைதானங்களில் மூன்றாம் இடத்தைப் பெறுவது அவுஸ்திரேலியாவின் 'சிட்னி' அரங்காகும். 'சிட்னி' அரங்கில் இதுவரை 96 டெஸ்ட் போட்டிகள் நடைபெற்றுள்ளன. 1882 ஆம் ஆண்டில்தான் இந்த அரங்கில் முதலாவது டெஸ்ட் போட்டி நடைபெற்றது. இதுவும் அவுஸ்திரேலியா, இங்கிலாந்து அணிகளுக்கிடையிலான போட்டியாகவே அமைந்தது. இதில் அவுஸ்திரேலியா 5 ஓட்டங்களால் வெற்றியீட்டியிருந்தது. இந்த அரங்கில் அவுஸ்திரேலியாவுடன் இங்கிலாந்து அணி 54 டெஸ்ட் போட்டிகளில் கலந்து கொண்டுள்ளமையும் குறிப்பிடத்தக்கது. 'சிட்னி' அரங்கில் இதுவரை 262 ஒருநாள் போட்டிகள் நடைபெற்றுள்ளன.



அவுஸ்திரேலியாவின் 'சிட்னி' கிரிக்கெட் அரங்கு

## முதலாவது டெஸ்ட் போட்டியில் பங்குபற்றிய நாடுகள் எவை?

இந்த வரிசையில் அதிக எண்ணிக்கையிலான டெஸ்ட் போட்டிகள் நடைபெற்ற மைதானங்களின் பட்டியலில் இலங்கையின் எஸ்.எஸ்.ஸி மைதானம் 24 ஆவது இடத்தினைப் பெறுகின்றது. இந்த மைதானத்தில் இதுவரை 31 டெஸ்ட் போட்டிகள் நடைபெற்றுள்ளன. 1984 ஆம் ஆண்டில்தான் இந்த மைதானத்தில் முதலாவது டெஸ்ட் போட்டி நடைபெற்றுள்ளது. இலங்கை, நியூஸிலாந்து அணிகளுக்கிடையிலான போட்டியே எஸ்.எஸ்.ஸி மைதானத்தில் நடைபெற்ற முதலாவது டெஸ்ட் போட்டியாகும். இந்தப் போட்டி வெற்றி தோல்வியின்றி முடிவுற்றிருந்தது. இந்த மைதானத்தில் இலங்கை அணியுடன் இந்திய அணி 6 போட்டிகளிலும் இங்கிலாந்து 4 போட்டிகளிலும் கலந்து கொண்டுள்ளன. அது மட்டுமன்றி இலங்கை அதிகமான டெஸ்ட் போட்டிகளை வெற்றி கொண்ட மைதானமாகவும் எஸ்.எஸ்.ஸி மைதானமே அமைந்துள்ளது. இதன்படி இலங்கை அணி எஸ்.எஸ்.ஸி மைதானத்தில் 16 டெஸ்ட் போட்டியில் வெற்றியீட்டியுள்ளது.

மேலும், எஸ்.எஸ்.ஸி மைதானத்தில் இதுவரை 112 சர்வதேச ஒருநாள் போட்டிகள் நடைபெற்றுள்ளமையும் குறிப்பிடத்தக்கது.

# இந்திய அணி உலகக் கிண்ணத்தை வெல்வதற்கு தேர்வுகளை மேற்கொள்வேன்

## -ஸ்ரீகாந்த்



"2011 ஆம் ஆண்டில் நடைபெறவுள்ள உலகக் கிண்ண கிரிக்கெட் போட்டியில் இந்திய அணி கிண்ணத்தை வெற்றி கொள்வதற்குப் பாடுபடுவேன்" என்று இந்திய கிரிக்கெட் தேர்வுக் குழுத்தலைவர் ஸ்ரீகாந்த் தெரிவித்துள்ளார். அண்மைக்காலங்களில் இந்திய அணி தொடர் தோல்விகளை சந்தித்து வந்தமை, முன்னாள் தேர்வுக்குழுக்களுடன் அணி வீரர்களுக்கு ஏற்பட்ட முறுகல்நிலை ஆகியவற்றை கவனத்தில் கொண்டும் இவற்றை சீர்படுத்தும் நோக்கில் ஸ்ரீகாந்த் இந்திய தேர்வுக்குழுவின் தலைவராக நியமிக்கப்பட்டுள்ளதாக தெரிவிக்கப்படுகின்றது.

தனது நியமனம் குறித்து மேலும் கருத்துத் தெரிவித்துள்ள ஸ்ரீகாந்த், தற்போதைய இந்திய டெஸ்ட் மற்றும் ஒருநாள் அணிகளையிட்டு தாம் திருப்தி அடைவதாகவும் ஆயினும் எதிர்வரும் காலங்களில் போட்டிகளை வெல்வதற்கு கடுமையாக உழைக்க வேண்டியிருப்பதாகவும் அதற்கென சில அதிரடி நடவடிக்கைகளை மேற்கொள்ள வேண்டியிருப்பதாகவும் குறிப்பிட்டுள்ளார். இதற்கமைய, அவுஸ்திரேலியாவுடனான போட்டிகள் முடிவடைந்ததும் போட்டித் தொடரினை ஆய்வு செய்து இந்திய அணியில் மாற்றங்கள் ஏற்படுத்தப்படலாம் என்று எதிர்பார்க்கப்படுகின்றது.

உரியவகையில் இந்திய அணியில் சில மாற்றங்களை ஏற்படுத்தினால் 2011ஆம் ஆண்டில் நடைபெறவுள்ள உலகக் கிண்ணத்தை வெற்றி கொள்ள முடியும் என்றும் ஸ்ரீகாந்த் நம்பிக்கை வெளியிட்டுள்ளார்.

இந்திய சர்வதேச ஒருநாள் அணியின் தலைவராக உள்ள டோனி, டெஸ்ட் அணிக்கும் தலைவராக நியமிக்கப்படக் கூடிய வாய்ப்புக்கள் இருப்பதாக எதிர்வு கூறப்படுகின்றபடியால் இந்திய அணியில் ஏற்படும் அதிரடி மாற்றங்களில் அதுவே முதல்கட்டமாக இருக்கலாம் என்றும் கருதப்படுகின்றது.

இந்திய அணி 1983 ஆம் ஆண்டில் உலகக் கிண்ணத்தை வெற்றியீட்டியதன் பின்னர் மற்றுமொரு தடவை உலகக் கிண்ணத்தை வெற்றியீட்டும் வாய்ப்புக் கிட்டவில்லை. அப்போது 83 இல் உலகக் கிண்ணத்தை வென்ற இந்திய அணியில் ஸ்ரீகாந்த்தும் இடம் பெற்றிருந்தார். அப்போது கவஸ்கரும், ஸ்ரீகாந்தும்தான் இந்திய அணியின் ஆரம்ப துடுப்பாட்ட வீரர்களாக இருந்தனர். அன்றைய காலகட்டங்களில் இந்திய அணியின் நுணுக்கம் கலந்த அதிரடி ஆட்டக்காரராக கருதப்பட்டவர்தான் ஸ்ரீகாந்த். அண்மைக்காலங்களில் தொலைக் காட்சியில் கிரிக்கெட் ஆய்வாளராகவும் பங்களிப்பை இவர் செலுத்தி வந்துள்ளார். இத்தகைய பின்னணி மிக்க ஸ்ரீகாந்த் இந்திய அணியின் தேர்வு விடயத்தில் சீரான ஒரு வழிமுறையைக் கையாள்வார் என்றே எதிர்பார்க்கப்படுகின்றது.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



# அற்லஸ் சித்ரூ மாகாண மட்ட பரிசளிப்பு விழாவில்....






அற்லஸ் சித்ரூ சித்திரம், உறுப்பெழுத்து, கட்டுரைப் போட்டியில் மாகாண மட்டத்தில் வெற்றி யீட்டியவர்களுக்கான பரிசளிப்பு விழா வைபவம் அண்மையில் கொழும்பு ஆனந்த கல்லூரியின் மூவர் அரங்கில் நடைபெற்றது.

மேற்படி விழாவிற்கு பிரதம அதிதிகளாக கொழும்பு பல்கலைக்கழகத்தின் சிரேஷ்ட விரிவுரையாளர் ரத்னபால சில்வா, ஆனந்த கல்லூரியின் அதிபர் லால் தசநாயக்க, சிலோன் பென்சில் நிறுவன அதிகாரி கே.செ.கே.நிஷாந்த, பிரதி அதிகாரி நிலான் சில்வா, திட்ட முகாமையாளர் ஹேமந்த விஜேசிறி, விநியோக முகாமையாளர் ஆனந்த ஜனபிரிய 'விஜய்' பத்திரிகையின் ஆசிரியர் வி.ரெட்லி ஹெரிசன், விஜய பத்திரிகையின் இணை ஆசிரியர் துமிந்த சஞ்ஜிவ பாலசூரிய ஆகியோரும் வருகை தந்திருந்தனர். (படப்பிடிப்பு-ஷெஹான் விக்ரமசிங்ஹ)







Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## 5 குறுக்கெழுத்துப் போட்டி இல.188

| | | | | | |
|---|---|---|---|---|---|
| 1 | | 2 | | ■ | 3 த |
| | ■ | | ■ | 4 | |
| | ■ | ■ | 5 | | |
| | ■ | 6 | | | ■ |
| 7 | | ய | | ■ | 8 |
| | ■ | | ■ | 9 | |

### மேலிருந்து கீழ்

01. இவர் தனது வாழ்நாட்களை சமூக சேவைக்காகவும் சமய நற்பணிகளுக்காகவும் அர்ப்பணித்ததோடு அமைதிக்கான நோபல் பரிசும் இவருக்குக் கிடைத்தது.
02. இலங்கையிலுள்ள 'நக்கிள்ஸ்' மலைத் தொடர்களின் தோற்றத்தை இதற்கு ஒப்பிடுவர்.
03. கோதுமை, நெல் என்பனவற்றை அரைத்த பின் கிடைக்கும் உமி அல்லாத கழிவுப்பொருள்.
04. சோறு.
05 பயிர்களின் வளர்ச்சிக்காக இடப்படுவது.
06. உலோகமொன்று.
08. கப்பல், விமானப் பயணங்களின்போது பிரதானமாக அவதானிக்கப்படுவது.

### இடமிருந்து வலம்

01. வசனமொன்றின் எழுவாய்-பயனிலைகளுக்கு முன்னால் அவற்றின் மேலதிக விளக்கத்துக்காக பயன்படுத்தப்படும் சொல்/சொற்றொடர்.
04. (பொதுவாக) கதவுகளைத் திறக்கவும் மூடவும் இது பயன்படும்.
05. எமது உடலில் வியர்க்காத உறுப்பு.
06. தண்ணீரில் நனைந்த பொருட்கள் இந்நிலையில் இருக்கும்.
07. மேரி கியூரியால் 1903 இல் கண்டுபிடிக்கப்பட்டது.
09. விருப்பம்-ஒத்தகருத்துச் சொல்.

### குறுக்கெழுத்துப்போட்டி 185 விடைகள்

| மேலிருந்து கீழ் | இடமிருந்து வலம் |
|---|---|
| 01. நாத்திகன் | 01. நாகசாகி |
| 02. சாதம் | 04. பூ |
| 03. கிளி | 05. தளிர் |
| 07. கென்யா | 06. தினம் |
| 08. சிலேடை | 08. சிவன் |
| 09. வரி | 10. மலேரியா |
| 10. மகா | 11. காடை |

குறுக்கெழுத்துப் போட்டி -188
"விஜய்" த.பெ.எண். 2037
கொழும்பு

### அன்பு மாணவர்களே!

இது உங்கள் கவனத்திற்கு.....

இனிவரும் போட்டிகளுக்கான விடைகளை நீங்கள் தபாலட்டையில் ஒட்டி எமக்கு அனுப்பி வையுங்கள். விடைகளை அனுப்பும் போது தவறாமல் உங்கள் பெயர், முகவரி, கல்வி கற்கும் தரம், பாடசாலையின் பெயர், அதன் முகவரி, வசிக்கும் நகரம், மாவட்டம் என்பனவற்றையும் எழுதி அனுப்புங்கள். அவை போட்டியில் வெற்றியீட்டியவர்களுக்கான பரிசில்களை கால தாமதமின்றி சேர்ப்பதற்கு பெரும் துணையாக அமையும். அத்துடன், நீங்கள் உங்களுக்கு விரும்பிய எந்தவொரு போட்டியிலும் கலந்து கொள்ளலாம் என்பதையும் கருத்தில் கொள்ளுங்கள்.

## 2

### (A) அது என்ன?


a) ஒற்றைக் கால் உண்டு. சுற்றி விட்டால் வளைந்து நெளிந்து ஒற்றைக்காலிலேயே ஆடி முடிக்கும். அது என்ன?...............................................
b) ஒட்டிக் கொண்டே வரும். உறங்கப்போனால் ஓடியே போய்விடும். அது என்ன? ...................................
c) கத்தி போல் இலையிருக்கும்; கவசம் போட்ட காயிருக்கும்; உண்பதற்கும் குடிப்பதற்கும் கூடவே பொருள் இருக்கும். அது என்ன?..................................
d இரவு-பகல் விழித்திருக்கும். இதயம் போல் துடிப்பிருக்கும். அது என்ன? .........................................
e) காடு-மேடு கடந்தாலும் கோயிலுக்குள் போகாது. அது என்ன? ....................................

### (B) பொருத்தமான மரபுத் தொடரில் கோடிடுக

1) கண் வைத்தல்;
a) விழித்திருத்தல் b) விரும்புதல் c) அன்பு காட்டல்
2) கரைத்துக் குடித்தல்;
a) நீரில் கரைத்தல் b) கரைத்துக் கொட்டுதல்
c) முழுமையாகக் கற்றறிதல்
3) நாக்கு நீளுதல்;
a) அளவுக்கு மீறிப் பேசுதல் b) நீண்ட நாக்கு
c) சுவை பார்த்தல்
4) பல்லிளித்தல்;
a) சிரித்தல் b) ஏளனம் செய்தல் c) பழித்தல்

## 4

### (A) கண்களுக்குப் புலப்படுவது என்ன?



(B)








தயாரிப்பு - நுஸ்பா கௌஸ்


1, 2, 3, 4, 5 என இலக்கமிடப்பட்டுள்ள பகுதிகளுக்கான விடைகளை தபால் அட்டையில் மாத்திரம் ஒட்டி 2008.10.15 ஆம் திகதிக்கு முன்னர் எமக்குக் கிடைக்கக்கூடியவாறு அனுப்பி வையுங்கள்.

அற்லஸ் அறிவுக்கு விருந்து 177
விஜய் - த.பெ.எண் 2037, கொழும்பு

## 3 கணக்குப் புதிர்



ஒரு வாடகைக் கார் சாரதி 5km தூரத்திற்கும் அதற்கு உட்பட்டதுமான தூரத்திற்கும் 50.00 ரூபாவைக் கூலியாகப் பெறுகின்றார். 5km க்கு பின் செல்லும் மேலதிக ஒவ்வொரு km தூரத்திற்கோ அதிலும் குறைந்த தூரத்துக்கோ 5.00 ரூபாவை மேலதிகமாக அறவிடுகின்றார்.

i. 10.5 km தூரத்திற்கு இவ்வாடகைக் கார் செல்வதாக இருந்தால் எவ்வளவு பணத்தை கூலியாகக் கொடுக்க வேண்டும்?
(அ) 100 (ஆ) 50 (இ) 105 (ஈ) 110
(உ) 80

ii. 5.5 km தூரத்திற்கு இவ்வாடகைக் கார் செல்வதாக இருந்தால் எவ்வளவு பணத்தை கூலியாகக் கொடுக்க வேண்டும்?
(அ) 55 (ஆ) 100 (இ) 50 (ஈ) 56
(உ) 105

iii. 15.5 km தூரத்திற்கு இவ்வாடகைக் கார் செல்வதாக இருந்தால் எவ்வளவு பணத்தை கூலியாகக் கொடுக்க வேண்டும்?
(அ) 155 (ஆ) 105 (இ) 100 (ஈ) 165
(உ) 115

iv. 4.0 km தூரத்திற்கு இவ்வாடகைக் கார் செல்வதாக இருந்தால் எவ்வளவு பணத்தை கூலியாகக் கொடுக்க வேண்டும்?
(அ) 45 (ஆ) 50 (இ) 40 (ஈ) 55
(உ) 35

## அறிவுக்கு விருந்து - 174 விடைகள்

**போட்டி: 03**

(A) மனித முகம்

(B)
a) சாந்தன்
b) சாந்தி
c) விஞ்ஞானம்
d) சமயம் - சாந்தன்
விஞ்ஞானம் - ரோஹித்
ஆங்கிலம் - குமாரி
தமிழ் - சாந்தி

**போட்டி: 04**

(A)
1 - அமுத விழா
2 - சாரதி
3 - அகலவத்தை
4 - லிபியா-அல் அஸீஸியா
5 - சிங்ஹகிரி

(B) 18 சிறிய வட்டங்கள்

## 1 ஆறு வித்தியாசங்களில் X அடையாளமிடுக





அறிவிப்பு: அறிவுக்கு விருந்து - 174 மற்றும் குறுக்கெழுத்துப் போட்டி - 185 பரிசு பெறும், பாராட்டுப் பெறும் அதிர்ஷ்டசாலிகளின் பெயர் விபரங்கள் அடுத்த இதழில் பிரசுரமாகும்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org




வரலாற்றிலிருந்து..

எழுதுபவர்: திலகன்
சித்திரம் : அபயன்

06

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## காட்டுத் தீயை அணைக்கும் 'ரொபோ'

இதுவொரு திரைப்படக் காட்சியல்ல. காட்டுத்தீயை அணைக்கும் தீயணைப்புப் படையினருக்கு உதவக்கூடிய புதுவித கண்டுபிடிப்பான 'ரொபோ' இயந்திரமே இது. 'கட்ரொபோ' என்று பெயரிடப்பட்டுள்ள இந்த 'ரொபோ'வை அமெரிக்



காவைசேர்ந்த ஜோர்டன் கேல்டன் என்பவரே தயாரித்துள்ளார். தற்போதைக்கு ஆராய்ச்சிக் கட்டத்திலுள்ள இந்த 'ரொபோ' கடும் வெப்பத்தைத் தாங்கும் வல்லமையைக் கொண்டுள்ளது. எனவே, எதிர்காலத்தில் பாரிய காட்டுத் தீயையும் அணைக்கக்கூடிய சக்தியைக் கொண்டதாக இந்த 'ரொபோ' அமைந்திருக்கும்.



### அவுஸ்திரேலிய கடலில்


# நூற்றுக்கணக்கான புதுவகை உயிரினங்கள் கண்டுபிடிப்பு!

அவுஸ்திரேலிய கடல் பரப்பில் அண்மைக்காலமாக முருகைக் கற்பாறைகள் அதிகம் உள்ள பகுதிகளில் ஆராய்ச்சிகள் தொடர்ச்சியாக நடைபெற்று வருகின்றமை நாம் அறிந்ததே. இந்த ஆராய்ச்சிகளின் போது புதுவிதமான கண்டுபிடிப்புக்களும் நிகழ்ந்து வருகின்றன. அதற்கமைய, சில தினங்களுக்கு முன்னர் அவுஸ்திரேலிய கடற்பரப்பில் உள்ள முருகைக் கற்பாறைகளில் மேற்கொள்ளப்பட்ட ஆராய்ச்சிகளில் புதுவிதமான கடல்வாழ் உயிரினங்கள் பலவற்றை ஆராய்ச்சியாளர்கள் கண்டுபிடித்திருப்பதாக செய்திகள் வெளியாகியுள்ளன.

லைசாட், ஹெரொன், நென்காலோ ஆகிய தீவுப் பகுதிகளை அண்டிய கடற்பரப்பில் இந்த ஆராய்ச்சிகள் மேற்கொள்ளப்பட்டிருந்தன. சுமார் 300 ற்கும் மேற்பட்ட புதுவிதமான கடல்வாழ் உயிரினங்களை இதன்போது ஆராய்ச்சியாளர்கள் கண்டுபிடித்துள்ளனர். அதுமட்டுமன்றி இறால் வடிவிலான ஓர் உயிரினமும் ஜெலிஃபிஷ் எனப்படும் மீன் இனம் மற்றும் புழுக்கள் என புதுவகையிலான பல்வேறு உயிரினங்களும் மேற்படி ஆராய்ச்சிகளின் மூலம் கண்டுபிடிக்கப்பட்டுள்ளன.

''அடிக்கடி சுழியோடிகள் பயன்படுத்துகின்ற குறிப்பிட்ட தீவுப் பகுதிகளில் இவ்வாறு பெரும் எண்ணிக்கையிலான உயிரினங்கள் கண்டுபிடிக்கப்பட்டமை ஆச்சரி





யத்திற்குரிய விடயமாக அமைந்துள்ளது. இவற்றைக் கண்டறிய வேண்டும் என்ற உத்வேகத்தில் ஆராய்ச்சிகளை மேற்கொண்டமையால்தான் இவ்வாறு பலவித உயிரினங்களை நம்மால் கண்டுபிடிக்க முடிந்துள்ளது'' என ஆராய்ச்சிகளை மேற்கொண்ட குழுவின் தலைவியான டுலியன் கேலி தெரிவித்துள்ளார்.

அவுஸ்திரேலியாவை அண்டிய கடற்பகுதிகள் உயிரின ஆராய்ச்சிகளுக்கு பிரசித்தமான பகுதிகளாகும். எனினும், புவிவெப்பமடைதல், கடல் மாசடைதல் ஆகிய காரணங்களினால் முருகைக் கற்கள் அழிவடைந்து வருகின்றமை இந்த புதுவகை உயிரினங்களுக்கு பாரிய அச்சுறுத்தலாக அமையவுள்ளதுடன் எதிர்வரும் மூன்று வருடங்களுக்கு இதனையிட்டுக் கூடிய அளவில் அக்கறை செலுத்த வேண்டியிருக்கும் என்றும் ஆராய்ச்சியாளர்கள் சுட்டிக்காட்டுகின்றனர்.








இப்பத்திரிகை கொழும்பு - 2, இல. 08, ஹுணுப்பிட்டிய குறுக்கு வீதி, விஜய நியூஸ்பேப்பர்ஸ் நிறுவனத்தினால் 2008, ஒக்டோபர் மாதம் 08ஆம் திகதி புதன்கிழமை அச்சிட்டு வெளியிடப்பட்டது.
Printed and Published by Wijeya Newspapers Ltd. No. 8, Hunupitiya Cross Road, Colombo - 02, on Wednesday October 08, 2008.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org